# ஈழநாதம்

THE EELANAATHAM

விலைரூபா:
3 - 50



ஈழநாதமே!!
வருக... வருக...

லீலா ஸ்ருடியோ
190, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் குடா
வீர வேங்கைகளே
உங்கள் வீரம் ஓங்குக!

எவர்சில்வர், கதிரைகள்
வாடகைக்கு விடப்படும்
லீலா ஸ்ருடியோ
190, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



நாதம் 01 | சுக்கில ௵ பங்குனி ௴ 01-ம் ௳ | புதன்கிழமை | (14 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 16 | ஓசை 24


# திருமலையில் சீனன்குடா தவிர இந்தியப்படை வெளியேறியது!

## நாளை வடக்கிலிருந்து முற்றாகப்போகும்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையிலிருந்து இந்திய இராணுவம் நேற்று முற்றாக வெளியேறியது. இப்பொழுது இந்திய இராணுவம் சீனன் குடாவில் மட்டுமே இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இந்திய இராணுவம் வெளியேறிய இடங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பேற்கச் சென்றபோது மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர்.

விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் இந்திய இராணுவம் வெளியேறிய இடங்களில் புலிக்கொடிகளை வெகு உற்சாகத்துடன் ஏற்றினர்.

கடைசியாக திருமலை நகரில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிய போது ஐந்து டாங்குகளும், பல வாகனங்களும், நூற்றுக்கணக்கான வீரர்களும் வெளியேறிச் சென்றனர்.

இந்தியப்படை வெளியேறியதைத் தொடர்ந்து தமிழீழ

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களின்வருகைநேரத்தில் அரச அதிபர் கவனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஊழியர்களின் காலம் தாழ்த்திய வருகையிலும், ஊழியர்களின் லீவு போன்ற விடயங்களிலும் புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அதிக கவனம் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலக ஊழியர்களில் சிலர் காலை 10 00மணிக்குப் பின்பே வேலைக்கு வருகிறார்கள் என்றும் பிற்பகல் 2.00 மணிக்கு முன்பே சிலர் வேலையை விட்டு வீட்டுக்குப் போகிறார்கள் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இனிமேல் ஊழியர்களின் வருகை சீராக அமையுமென்று ஊகிக்கப் படுகிறது. (தி)

## மானிப்பாய் இலங்கை வங்கியில் சிறுபிள்ளைகள் சேமிப்பு கணக்கு

(சுதுமலை)

இலங்கை வங்கியினர் பிள்ளைகளுக்கான சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்பது தொடர்பான கருத்தரங்குகளை பாடசாலைகளில் நடாத்தி வருகிறார்கள்.

இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் சீ என். நவரட்ணராஜா இது பற்றி தகவல் தருகையில் எமது வங்கிக் கிளையில் இருநூற்றி எண்பது பிள்ளைகளுக்கான கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு ஆறுலட்சத்து இருபத்தோழாயிரத்தி முன்னூறு ரூபா வரை வைப்பிலிட்டிருக்கிறார்கள் என்றார்.

நூறு ரூபா ஆரம்ப வைப்புத் தொகையுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் தமது பதினாறு வய

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று இறுதி முடிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை வேலணை தீவுப்பகுதியிலிருந்து மேன்முறையீட்டுக்காக விண்ணப்பித்திருந்தோரின் இறுதி முடிவுகள் இன்று அந்தந்த பிரதேச கொத்தணி தலைமையகங்களிலும் உதவி அரசாங்க பிரிவு காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (லோ)

## க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவு

## பல்கலைக்கழக அனுமதி பெற 37,000 மாணவருக்கு தகுதி

(கொழும்பு)

நேற்று முன்தினம் வெளியான க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவுகளின் படி பல்கலைக்கழக அனுமதிக்கு முப்பத்தேழாயிரம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சத்து பதினெண்ணாயிரம் பேர் இப்பரீட்சைக்குத் தோற்றியிருப்பதாகவும் அவர்களில் முப்பத்தொரு சதவீதமானோர் சித்தி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாரத்தினுள் சகல பரீட்சார்த்திகளுக்கும் முடிவுகள் கிடைக்கும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

## க.பொ.த.உ.த. பரீட்சை முடிவில் யாழ். இந்து முதலிடம்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ். மாநகர பாடசாலைகள் உயர்தர பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில் யாழ் இந்து கல்லூரியில் நால்வர் அதி திறமைச் சித்தி பெற்றுள்ளனர். அத்துடன் நூற்றிமுப்பது பேருக்கு மேற்

கம் புக தகுதி உடையோராக உள்ளனர். யாழ் மத்திய கல்லூரியில் ஒருவர் 4 பாடத்தில் அதிதிறமையும் முப்பது பேர் பல்கலைக்கழக விண்ணப்பத்திற்கு தராதரமும் பெற்றுள்ளனர். வேம்படி மகளீர் கல்லூரியில் இருவர் நாலு பாட

## "பெருமாள் மாலைதீவிலா இந்தியாவிலா?" அமைச்சர் ரஞ்சன் கேள்வி

### "19 யோசனைகள் பற்றி யாருடன் பேசுவது"

''வடக்கு கிழக்கு மாகா ... ல்லை மாலைதீவுக்குச் ... வில்லை. இந்த நிலையில்

## ஒரிஸாவிற்கு தமிழ் நாட்டில் இருந்து விசேட பொலிஸ் பிரிவு

(சென்னை)

ஒரிஸாவில் முகாம்களில் தங்கியிருப்போருக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் இருந்து விசேட பொலிஸ் பிரிவொன்று ஒரிஸா சென்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலையில் இருந்து கப்பல் மூலமும், விமான மூலமும் கொண்டு செல்லப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப் இயக்கத்தினரும் அவர்களைச் சார்ந்த

## பாகிஸ்தானுக்கு வி. பி. சிங் எச்சரிக்கை

(புதுடில்லி)

பாகிஸ்தான் ஜம்மு காஷ்மீரில் அடாவடித்தனங்களில் ஈடு

பித்திருந்தோரி இறுதி முடிவுகள் இன்று அந்தந்த பிரதேச கொத்தணி தலைமையகங்களிலும் உதவி அரசாங்க பிரிவு காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(லோ)

கப்பட்டு ஆறுலட்சத்து இருபத்தோழாயிரத்தி முன்னூறு ரூபா வரை வைப்பிலிட்டிருக்கிறார்கள் என்றார்.

நூறு ரூபா ஆரம்ப வைப்புத் தொகையுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் தமது பதினாறு வய

(6ஆம் பக்கம் பார்க்க)

துடன் வரவேற்றனர்.

விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் இந்திய இராணுவம் வெளியேறிய இடங்களில் புலிக்கொடிகளை வெகு உற்சாகத்துடன் ஏற்றினர்.

கடைசியாக திருமலை நகரில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிய போது ஐந்து டாங்குகளும், பல வாகனங்களும், நூற்றுக்கணக்கான வீரர்களும் வெளியேறிச் சென்றனர்.

இந்தியப்படை வெளியேறியதைத் தொடர்ந்து தமிழீழ

(6ஆம் பக்கம் பார்க்க)

பத்தேழாயிரம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சத்து பதினெண் ... தெரிவித்தார்.

இவ்வாரத்தினுள் சகல பரீட்சார்த்திகளுக்கும் முடிவுகள் கிடைக்கும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

# க.பொ.த.உ.த. பரீட்சை முடிவில் யாழ். இந்து முதலிடம்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்.மாநர பாடசாலைகள் உயர்தர பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில் யாழ் இந்து கல்லூரியில் நால்வர் அதி திறமைச் சித்தி பெற்றுள்ளனர். அத்துடன் நூற்றிமுப்பது பேருக்கு மேற்பட்டோர் பல்கலைக்கழக தகமைபெற்றுள்ளனர் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இருவர் நாலு பாடங்களில் அதிதிறமைச் சித்தி பெற்றுள்ளதுடன் எழுபது பேர் பல்கலைக்கழகம் புக தகுதி உடையோராக உள்ளனர். யாழ் மத்திய கல்லூரியில் ஒருவர் 4 பாடத்தில் அதிதிறமையும் முப்பது பேர் பல்கலைக்கழக விண்ணப்பத்திற்கு தராதரமும் பெற்றுள்ளனர். வேம்படி மகளீர் கல்லூரியில் இருவர் நாலு பாட அதிதிறமையும் பெற்றுள்ளனர். சுண்டிக்குளி மகளீர் கல்லூரியில் ஒருவர் இரு பாட அதிதிறமைச் சித்தியும் இரு பாட திறமைச் சித்தியும் பெற்றுள்ளார்.

(லோ)

# "பெருமாள் மாலைதீவிலா இந்தியாவிலா?" அமைச்சர் ரஞ்சன் கேள்வி

## "19 யோசனைகள் பற்றி யாருடன் பேசுவது"

''வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்தியாவுக்குச் சென்றார் என்றும் அவர் இந்தியாவுக்குப் போகவில்லை மாலைதீவுக்குச் சென்றிருக்கலாமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. உண்மையில் வரதராஜப்பெருமாள் எங்கேயிருக்கிறாரென்பது தெரியவில்லை. இந்த நிலையில் அவர் தெரிவித்த பத்தொன்பது யோசனைகளைப்பற்றி யாருடன் பேச்சுவார்த்தை நடத்துவது?''

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரிஸாவிற்கு தமிழ் நாட்டில் இருந்து விசேட பொலிஸ் பிரிவு

(சென்னை)

ஒரிஸாவில் முகாம்களில் தங்கியிருப்போருக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் இருந்து விசேட பொலிஸ் பிரிவொன்று ஒரிஸா சென்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலையில் இருந்து கப்பல் மூலமும், விமான மூலமும் கொண்டு செல்லப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப் இயக்கத்தினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஒரிஸா மாநிலத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானுக்கு வி. பி. சிங் எச்சரிக்கை

(புதுடில்லி)

பாகிஸ்தான் ஜம்மு காஷ்மீரில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டால் பதிலடி கிடைக்கும் என்று பாரதப் பிரதமர் வி.

# போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க புதிய வழிமுறைகள்

(கொழும்பில்)

கொழும்பு மாநகரில் போக்குவரவு நெருக்கடிகளை தீர்ப்பதற்கு புதிய முறையை போக்குவரத்து அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன்படி காலை ஏழு மணி முதல் ஒன்பது மணிவரையும், மாலையில் நான்கு மணி முதல் ஆறு மணிவரையும் வாகனப் போக்குவரவு நெருக்கடி கட்டுப்படுத்தப்படவுள்ளது.

கனரக வாகனங்கள், லொறிகள் கொள்கலன்கள் உள்ள வாகனங்கள் என்பவற்றை இந்த நேரங்களில் குறிப்பிட்ட விதிகளில் நடமாடுவதற்கு தடைவிதிக்கப்படவுள்ளது.

# கல்முனையில் பொலிஸ் - புலிகள் சிறு உரசல் பின் சமரசம்!

## மட்டக்களப்பில் பொதுமக்களுக்கு போக்குவரத்துப்பாதைதிறக்கப்பட்டது

(கல்முனை)

மட்டக்களப்பு கல்முனைப் பகுதியில் பொலிஸ் நிலையம் முன்பாகப் போடப்பட்டிருந்த வீதித்தடைகளை நேற்றுக்காலை வாகனப் போக்குவரத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகளினால் திறந்து விடப்பட்டது. இச்சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதியில் நிலவிய பரபரப்பு சில நிமிடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து கல்முனைப்பகுதியில் அமைதியான சூழ்நிலை நிலவிய போதிலும் மேற்படி வீதி மூடப்பட்டிருந்தது. இவ்வீதியைத் திறப்பது குறித்து விடுதலைப் புலிகள் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் காரணமாக விடுதலைப்புலிகள் விரைந்து வீதித்தடைகளை அகற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டத்தில் மேலும் 208 கிராமசேவகர் பிரிவுகள்

(அரியாலை)

கமநல சேவை உத்தியோகத்தர்களையும், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களையும் கிராம சவையாளர்களாக பதவி மாற்றம் செய்யும் அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க முன்பு யாழ். மாவட்டத்தில் இருநூற்றி இருபத்தேழு பிரிவுகளாக வரையறை செய்யப்பட்டிருந்த கிராம சேவையாளர்கள் பிரிவுகள் தற்போது மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் பகிர்ந்து அளிக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நிறுவை அளவுப் பரிசோதகர் வடக்கில் போதியளவு இல்லை

(வவுனியா)

வடக்கில் போதிய அளவு நிறுவை அளவைகள் பரிசோதகர்கள் இல்லை எனத் தெரியவந்துள்ளது. இவ்வெற்றிடங்கள் அதிக காலம் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

மன்னார், முல்லைத்தீவு ஆகிய கச்சேரிகளில் நிறுத்தல் அளவைகள் பிரிவு இருந்தபோதும் அங்கு ஊழியர்கள் இல்லை. வவுனியாக் கச்சேரியில் வேலை செய்யும் நிறுத்தல் அளவைகள் பரிசோதகர்களும், உதவியாளர்களுமே இவ்விடங்களுக்குச் சென்று தராசு, படிகளுக்கு 'சீல்' வைக்கும் வேலைகளைச் செய்து வருகின்றார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி சிறிய ரயில் நிலையங்களுக்கு மூடுவிழா

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது செயலிழந்துள்ள சிறிய ரயில் நிலையங்களை மூடுவதற்கு ரயில்வே திணைக்களம் ஆலோசித்து வருகிறது.

கடந்தகால வன்செயல்களால் சில ரயில் நிலையங்கள் சேதமாக்கப்பட்டதுடன் அங்கிருந்த விலைமதிப்புள்ள பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இவற்றை மீண்டும் திருத்தியமைக்க பெரும் தொகையான செலவு ஏற்படும் என்ப

(6ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளத்தில் யாழ். நோக்கி வந்த பஸ்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இரு தனியார் பஸ்களை மறித்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று பயணிகளிடம் பணம், நகை மற்றும் பொருட்களைஅபகரித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு புத்தளத்திற்கு அண்மையில் உள்ள காட்டுப் பகுதியில் நடைபெற்றது.

மேற்படி இடத்தில் வழி மறிக்ப்பட்ட இருபக்கங்களும் காட்டு பாதையூடாக திசை திருப்பப்பட்டு கொள்ளைக் கோஷ்டியினரால் கொண்டு செல்லப்பட்டதாம்.

பயணிகளை சத்தமிட்டால் சுட்டுப்போடுவோம்! என்று மிரட்டினார்களாம் பயணிகளிடமிருந்து பணத்தையும், நகைகளையும் அபகரித்துக் கொண்ட கொள்ளையர்கள், தேநீர் தயாரிச்கும் 'கேற்றில்' வைத்திருக்கிறீர்களா என்று பயணிகளிடம கேட்டனராம்.

கொள்ளையர்கள் நீல நிறச் ஷேர்ட்டும், அதே நிறத்தில் ஜீன்ஸும் அணிந்திருந்தனர் என்றும் மேற்படி சம்பவத்தில் பணத்தைப் பறிகொடுத்தவர் நேற்றுத் தெரிவித்தார்.

சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பணமும், நகைகளும், மற்றும் பொருட்களும் அபகரிக்கப்பட... என்று அவர் மேலும் ...வித்தார்

## மதிய போசனம் இல்லை

(கொழும்புத்துறை)

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளில் வழங்கப்பட்டு ருவகின்ற இதே வேளையில் கொழும்புத்துறை, இந்து மகா வித்தியாலயத்தில் கடந்த ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடைசியாகக் கிடைத்த செய்தி

# பெருமாள் கர்நாடகத்தில்!

(பெங்களூர்)

இந்திய விமானப் படை விமானத்தில் திருமலையில் இருந்து வெளியேறிய வரதராஜப் பெருமாள் இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் தங்கியிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. மாலைதீவு, மொறிசியஸ், அந்தமான் தீவு, சிசில்ஸ் ஆகிய சிறு தீவுகளில் ஏதோ ஒன்றில் பெருமாள் தங்கியிருப்பதாக முன்னர் வதந்திகள் வந்தன. ஆனால் தற்பொழுது பெருமாள் இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் கர்நாடக மாநிலத்தில் தங்கியிருப்பதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

# வாள் இருந்தாலே சத்தியப்பிரமாணம்

(புதுடில்லி)

இந்தியப் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிய தீவிரவாதியான சீக்கியர் ஒருவர், பாராளுமன்றத்துக்குள் தன் வாளைக் கொண்டுசெல்ல அனுமதித்தால்தான், தான் சத்தியப் பிரமாணம் செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வி.பி. சிங்கின் அரசாங்கத்துக்கு இது ஒரு தலையிடி என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளபபடுகிறது.

சீக்கிய சமய ஆசாரங்களின் படி, சீக்கியர் தம் வசம் ஒரு வாளை வைத்திருப்பது சமயக் கடமைகளில் ஒன்றாகும்.

பிரச்சினைக்குரிய வாளின் நீளம் மூன்று அடியாம்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிசப்பட்ட ' உழுந்து மா, கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M., No·777 K.K.S Rd, Jaffna·

கவரிடுதல்

அடையாள அட்டைகளுக்கும் மற்றும் நாளாந்தம் கையாளும் ஆவணங்களுக்கும் சவர்ச்சியான பிளாஸ்டிக் கவரிட யாழ். நகரில் தனிச்சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

## தொடர்பு அதிகாரியின்றி அவதி

(வவுனியா)

வவுனியாக் கச்சேரியில் பொது சனத் தொடர்பு உத்தியோகத்தராகக்சடயையாற்றிய திரு.வி-கே.சர்மா யாழ்ப்பாணக் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இடமாற்றம் பெற்றுப் பலநாட்களாகியுப் வவுனியாக் கச்சேரிக்குப்புதியபொது சனத் தொடர்பு உத்தியோகத்தர் எவரும்நியமிக்கப்படவில்லை.

இதனால்வவுனியாக்கச்சேரியில் தமது அலுவல்களைக் கவனிக்க வரும் பொது மக்கள் யாரிடம் தமது பிரச்சினையை முறையிடுவது எனத்தெரியாது கஸ்டம் அடைகிறார்கள்.(31)

வவுனியாச் செயலகத்தில்

# தமிழ்த் தட்டச்சு இயந்திரங்களின்றி ஊழியர்கள் பெரும் அவதி

(வவுனியா)

வவுனியா அரசாங்க செயலகத்தில் வேலை செய்யும் பெரும்பாலான ஊழியர்கள் தமிழர்களாக இருந்தும், தமிழில் தமது அலுவல்களைக் கவனிக்க முடியவில்லை என ''ஈழநாதம்'' நிருபருக்கு அரச ஊழியர் ஒருவர் கூறினார்.

ஒவ்வொரு திணைக்களங்களிலும் சிங்களத் தட்டச்சுப் பொறிகள் இருக்கின்றன. முழு வவுனியாக் கச்சேரியிலும் நான்கு தட்டெழுத்து இயந்திரங்களே பாவனையில் உள்ளன.

இவற்றில் இரண்டு பழுதடைந்து உள்ளன. இந்நிலையில், தமிழ் ஆட்சிமொழியானாலும் அதனை அமுல்நடாத்துவது கஸ்டமானது என அவர் கூறினார்.

வடக்குக் - கிழக்கு மாகாண சபை வவுனியாக் கச்சேரியைச் சென்றவருடம் ஓரளவு கட்டுப்படுத்தியது. தமிழில் தான் எல்லா அலுவல்களும் தாம் நடத்த இருப்பதாக அவர்கள் கூறினர். ஆயினும் அவர்கள் கூட இந்த அடிப்படைக்குறைபாடுகளை நிவிர்த்தி செய்ய வில்லை.

பின்பு அவர்கள் (மாகாண சபையினர்) திருமலைக்குச் சென்ற பின்பு அங்கிருந்து வரும் கடிதங்கள் பல ஆங்கிலத்திலேயே வந்து கொண்டிருந்த. இந்நிலையில் தமிழ் மொழியில் கருமங்கள் ஆற்றுவது எப்படி? எனவும் அவர் வினாவினார்.

வவுனியாப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் வாழும் பிரிவு 73 சதுரமைல்களாகும். மொத்தத்தில் குறிப்பிட்டால் வவுனியா தமிழ்ப்பிரதேசமாகும். இருப்பினும் 73 சதுரமைல் பிரதேசத்தில் வாழும் மக்களின் மொழியே வவுனியாக் கச்சேரியை ஆண்டுகொண்டிருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(31)

உங்களுக்கு தேவையான

'சிசில்'

குளிர்சாதனப் பெட்டிகளை

உடனடியாக பெறுவதற்கு

எம்மை நாடுங்கள்

எம்மால் எல்லா விதமான

குளிர்சாதனப் பெட்டிகளும்

திருத்திக் கொடுக்கப்படும்

சிலோன் மேர்சன்ஸ் லிமிற்

484, ஆஸ்ப திரி வீதி,

யாழ்ப்பாணம்.

B 257

## நூல் வெளியீட்டு விழா

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினால் வரும் வியாழக் கிழமை நூல் வெளியீட்டு விழா ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ் விழாவில் எஸ். சிவலிங்கராஜா எழுதிய வித்துவசிரோன்மணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும் என்ற நூல் வெளியிடப்படவிருக்கிறது. இவ்வைபவம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும். இந் நூலின் வெளியீட்டு உரையை கவிஞர் இ.முருகையன் நடாத்துவார் கலை நிகழ்ச்சியாக திருமதி கல்யாணி சுந்தரலிங்கத்தின் மாணவிகள் வழங்கும் நடன நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## கோண்டாவில் டிப்போவில் அறுபது பஸ்கள் பழுது

(கோண்டாவில்)

யாழ் கோண்டாவில் சாலையில் பழுதடைந்த நிலையிலுள்ள 60 இ. போ. ச. பஸ்களையும் திருத்துவதற்கான உதிரிப்பாகங்களை வாங்குவதற்க்காக அரசாங்கத்தால் 100 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக வடபகுதி போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் இந்த பஸ்கள் யாவும் திருத்தபபட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று கூறிய அவர் தற்பொழுது வடபகுதிபோக்குவரத்து சபையின் நாளாந்த வருமானம் இருபது சத விகிதத்தால் அதிகரித்துள்ளதென்றும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம் பெற்று வந்த நெடுபிடிகள் தற்பொழுது தணிந்துள்ளமையும், பயணிகள் இ. போ ச. சேவையை வெகுவாக விரும்பி நாடுவதுமே இந்த வருமான அதிகரிப்புக்கு காரணம் என்று கூறிய திரு. கனகரத்தினம் பழைய பஸ்கள் திருத்தி அமைக்கப்படுவதுடன் அமைச்சு தமக்கு அளித்துள்ள வாக்குறிதியின்படி புதிய பஸ்கள் வந்து சேருமிடத்து இந்த வருமானம் மேலும் அதிகரிக்கலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (34)

Personal Class

Special English Courses

விசேட ஆங்கில வகுப்புகள்

துரித, விரிவான, விளக்கமான, பயனுள்ள

ஆங்கில மொழிப் போதனை

உயர்கல்வி மாணவர்க்குரியது

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

Intensive Work

Step by Step Method

COURSE CONTENT:
- Use of Grammar
- Vocabulary
- Study of Prose Verse Plays
- Practice in Comprehension
- Practice in Writing skill

ஆரம்பம்: 17-03-1990

சனி, ஞாயிறு காலை 9 -- 11 வரை


Printed Lessons & Notes Supplied at no extra Cost

NEW SCIENCE ACEDEMY

Opp. B. M. C. JAFFNA.

(B. 254)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)

## அவதி

(வவுனியா)

வவுனியாக் கச்சேரியில் பொது சனத் தொடர்பு உத்தியோகத்தராகக்சடயையாற்றிய திரு.வி-கே.சர்மா யாழ்ப்பாணக் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இடமாற்றம் பெற்றுப் பலநாட்களாகியுப் வவுனியாக் கச்சேரிக்குப்புதியபொது சனத் தொடர்பு உத்தியோகத்தர் எவரும்நியமிக்கப்படவில்லை.

இதனால்வவுனியாக்கச்சேரியில் தமது அலுவல்களைக் கவனிக்க வரும் பொது மக்கள் யாரிடம் தமது பிரச்சினையை முறையிடுவது எனத்தெரியாது கஸ்டம் அடைகிறார்கள்.(31)


# சிலோன் மேர்சன்ஸ் லிமிற்

484, ஆஸ்ப திரி வீதி,

யாழ்ப்பாணம்.

B 257


## விழா

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினால் வரும் வியாழக் கிழமை நூல் வெளியீட்டு விழா ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ் விழாவில் எஸ். சிவலிங்கராஜா எழுதிய வித்துவசிரோன்மணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும் என்ற நூல் வெளியிடப்படவிருக்கிறது. இவ்வைபவம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும். இந் நூலின் வெளியீட்டு உரையை கவிஞர் இ.முருகையன் நடாத்துவார் கலை நிகழ்ச்சியாக திருமதி கல்யாணி சுந்தரலிங்கத்தின் மாணவிகள் வழங்கும் நடன நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## நினைவஞ்சலி



### கப்டன் வாதவூரன்

### தம்பையா யோகேஸ்வரன்

தாயின் மடியில் 4-9-1965 — தாயக மண்ணில் 14-3-1988

நேற்றைய தடங்கள்
மறைந்தே போயின
நினைவுகள் மட்டும்
உறைந்தே உள்ளன
தாயக மண்ணும்
தாயின் மொழியும்
நேயனே உந்தன்
இரு விழியாயின
ஆயிர மாயிரம்
தோழரின் தடங்கள்
அன்பனே உன்னடி
தொடர்ந்தே உள்ளன
அவர்களில் உயிர்த்து
அலையென எழுவாய்
இனிவருங் காலம்
எமதென அறைவாய்....

என்றும் உன்நினைவால் வாழும்
பெற்றோர் - சகோதரர்
நண்பர் - உறவினர்

(B 258)


சூப்பர் ஸ்ரார்
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
**ஹரன் யாழ்.**
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

**லிடோ (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
**வெலிங்டன் (யாழ்)**
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ஸ்ரீதர் (யாழ்)**
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**



ஈழநாதத்தை

## வாழ்த்துகின்றோம்

# நியூட்டன் கல்வி நிலையம்

(அர்ச். சூசையப்பர் கோவில் முன்பாக)

பத்தமேனி, அச்சுவேலி.

(B.245)


யாழ்ப்பாண மாநகரசபை

## நீர் விநியோகம் இடை நிறுத்தம்

நீர் பிரிவிடுதல் சம்பந்தமாக பிரதான நீர் குழாயில் திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக 15 - 03 - 90 ஆந் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கு பிரதான தாங்கிமூலமான நீர் விநியோகம் இடை நிறுத்தப்படவுள்ளது என்பதனை வருத்தத்துடன் பொது மக்களுக்கு அறியத் தருகிறேன்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13 - 03 - 1990

(B-259)

### லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி பழைய மாணவர்களுக்கு

## அறிவித்தல்

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களின் பொதுக் கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற இருப்பதால் எதிர்வரும் 16 - 3 - 90 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு
தற்காலிகச் செயலாளர்

(240)


# கல்யாணி கிறீ[illegible] ஹவுஸ்

தரமானதும், சுவையும் நிரம்பிய ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள் மற்றும் மட்டன்றோல், கட்லட், பற்றிஸ், கேக் வகைகள், சுவிற்ஸ், மிக்சர், பீடா முதலியவற்றிறகு இன்றே விஜயம் செய்யுங்கள்!

தரத்துக்கு மறுபெயர் "கல்யாணி"

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(B.251)

# லித்வேனிய தனிநாட்டுப் பிரகடனம்

# சோவியத்துக்கு அபாய அறிவிப்பு

## ஜனாதிபதி கொர்பச்சேவ் கருத்து

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்ல லித்வேனியக் குடியரசு செய்த முடிவு தனக்கு திகிலைத் தருவதாக ஜனாதிபதி கொர்பச்சேவ் தெரிவித்திருக்கிறார். இது சோவியத் யூனியனுக்கு ஒரு அபாய அறிவிப்பாகவும் சோவியத் யூனியன் முழுவதையும் ஒரு தாக்கத்திற்கு உள்ளாக்கும் நடவடிக்கை என்றும் கருத்து வெளியிட்டார். இவ்வாறு கடந்த திங்கள், செவ்வாய் கூடியமக்கள் பிரதிநிதிகள் காங்கிரசில் கூறினார். மேலும் அவர் குறிப்பிடுகையில் லித்வேனியாவில் இருந்து தனக்கு அதிகாரபூர்வமாக செய்திகள் கிடைக்கவில்லை என்றாலும் இதுவரை கிடைத்திருக்கும் தகவல்கள் தனக்கு திகிலைத் தருவதாக கூறினர்.

முழு சோவியத் யூனியனின் அடிப்படை நலன்களையே பாதிக்கக்கூடிய இந்த நடவடிக்கை பற்றி சோவியத் அரசும் பாராளமன்றமும் பரிசீலனை செய்யவேண்டும் என்ற திட்டத்தை பாராளமன்றத்தில் முன்வைத்தார். இந்தத் திட்டத்தை வாக்கெடுப்பின்றி அங்கீகாரம் செய்த பாராளமன்ற, அரசியல் தலைவர்களுக்கு பெருமளவு நிர்வாக அதிகாரம் வழங்கும் சட்டம் ஒன்றைப்பற்றிய விவாதத்தையும், கம்யூனிசகட்சிக்கு சோவியத்யூனியனில் ஆட்சி நடத்த தானாக உள்ள உரிமையை அரசியல் சாசனத்தில் இருந்து நீக்கும்விவாதத்தையும் தொடங்கியது ஆனால்கொர்பச்சேவ் பாராளுமன்றத்திடம் கூறியிருக்கும் நிர்வாக அதிகாரங்களை பாராளுமன்றம் அவருக்கு வழங்குமா என்பது இன்னமும் தெரியவில்லை. அத்துடன் லித்வேனிய குடியரசுப் பிரதிநிதிகளும், பால்டிக் குடியரசுகளான லட்வியா, எஸ்தோனியா பிரதிநிதிகளும், எதிரணிகளும் எதிராக வாக்களித்தால் சோவியத் அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதற்கு தேவையான 2/3 பெரும்பான்மை கிடைக்காமல் போகலாமென மொஸ்கோ அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இதற்கிடையில் லித்வேனியதாம் சட்டபூர்வ அம்சங்களை கவனமாக பரிசீலித்து செயல்பட்டிருப்பதாக கூறுகிறது. 1918ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுதந்திர பிரகடனம் இப்போது மீண்டும் செயலுக்கு வருவதாக கூறியுள்ளது. இதைப்பற்றி லித்வானிய சட்ட நிபுணர்கள் குறிப்பிடுகையில் 1940இல் லித்வேனிய குடியரசையும் ஏனைய மூன்று குடியரசுகளையும் கட்டுப்படுத்தி சோவியத்யூனியன் தன்னோடு ஒருபகுதியாக சேர்த்ததாகவும் அப்படிச் சேர்க்க சோவியத் யூனியனுக்கு சட்டபூர்வ உரிமை இல்லை என்றும் கூறினார்.

இதே வேளை லித்வேனியவின் தீர்மானத்தை மதித்து செயற்படுமாறு சோவியத் யூனியனை வலியுறுத்தியுள்ள அமெரிக்கா சகல தரப்பினரும் வன்செயல்களைத் தவிர்க்க வேண்டும் எனக் கோரி

## கங்கேரியில் இருந்து சோவியத் படை விலகல்

(மொஸ்கோ)

கங்கேரியில் இருந்து தனது படைகளை முற்றிலும் விலக்கிக் கொள்ளும் பணியை சோவியத் யூனியன் துவக்கியிருக்கிறது. தேர்தல்கள் நடைபெறுவதற்கு இருவாரங்கள் இருப்பதற்குள்ளேயே பத்மாஸ்கர் என்ற கங்கேரியின் சிறிய நகரத்திலிருந்து இந்தப் படை விலகல் தொடங்கியிருக்கிறது.

அதேவேளை இந்தப் படை விலகலை வார்சோ ஒப்பந்த நாடுகளும், நேட்டோ நாடுகளும், பத்திரிகையாளரும் அவதானித்து வருகிறார்கள். மேலும், சோவியத் படைகளை ஏற்றிச் செல்லும் முதலாவது ரயிலை இவ் அவதானிப்புக் குழுவினர் பார்த்தனர்.

## அன்னை பூபதியின் நினைவு நாள் சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

தியாகி அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தினை சிறப்பாக அனுஷ்டிக்க முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவும், மற்றும் அன்னையர் முன்னணி வெகுஜன அமைப்புக்கள் தங்கள் நிகழ்ச்சிகளை தயார் செய்யும் நோக்மாக கடந்த 11-03-90 அன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட அலுவலகத்தில் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டியது.

இக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் திரு. திவாகர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன்; அரசியல் கட்சிப்பொறுப்பாளர்கள், கலை கலாசாரப் பொறுப்பாளர்களும் கருத்துக்களை வழங்கியதுடன் கீழ் காணும் நிகழ்ச்சிகளை பிரதேச மாவட்டத்தில் நடாத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்:-

தியாக திருநாட்களில் அஞ்சலி செலுத்தும் வைபவம்.

ஊர்வலம், உண்ணாவிரதம் கிராமங்கள் தோறும் நடாத்தத் தீர்மானம்.

சகல கிராமமட்டத்திலும் பொதுப்பணி செய்தல்.

சிரமதானம், மரம் நாட்டு பிரதான மாவட்டத்தில் கலை நிகழ்ச்சிகள்.


இலக்கியப் போட்டிகள்.

பிரதேச பாடசாலை மட்டத்தில் தியாக வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் அமைத்தல்.

பூபதி நினைவு விளையாட்டுவிழா 2ஆம் ஆண்டு பிரதேச மாவட்டத்தில் நடைபெறும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் தியாகி பூபதி நினைவு தினங்களில் நடாத்தப்படுவதுடன் இவை போட்டி நிகழ்ச்சிகளாகவே அமையும் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சகல மக்களையும் இந் நிகழ்ச்சிகளில்கலந்துகொண்டு அதில் பங்குபற்றியும் அன்னையின் தியாகத்தை கௌரவித்து அஞ்சலி செலுத்துமாறும்




## 'அப்பு' வின் சேவைக்கு பாராட்டு

(கிளிநொச்சி)

கரைச்சி சைவ அபிவிருத்திச் சங்கத்தின் குருகுலமும், அகில இலங்கை காந்திசேவா சங்கமும் கிளிநொச்சிமாவட்ட சைவமக்களின் இருகண்களாக இருந்து, சைவ மதத்தை வளர்த்து வருவதுடன், அனாதைக் குழந்தைகளுக்கு உணவு, உறைவிடம், கல்வி இன்னோரன்ன பலவற்றையும் வழங்கிவருகிறது.

இவ்வாறு கிளிநொச்சி ஜெயந்திநகர் குருகுல ஆண்டு விழாவிலும், கொடித் தினத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய சர்வோதய பணிப்பாளர் ஜெகா செந்தில்நாதன் கூறினார்.

திரு. ஜெகா செந்தில்நாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

கடவுள் இல்லை என்பதையும், கொலைகாரனையும், கள்ளனையும் கூட எமது மதம் விலக்கி வைப்பதில்லை. அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதே சைவசமயம். எமது சமயத்தவர்களுக்குச் சோதனைகள் அதிகம. அதில் சித்தியடைபவர்கள் தான் ஆண்டவனை அடைய முடியும் என்றார்.

மறைந்த குருகுலத்தின் ஸ்தாபகர் 'அப்பு' வின் பணிகளையும் பாராட்டிய அவர் அப்புவினால் இங்கு ஏற்படுத்தப்பட்ட அச்சகம், ஓடுத் தொழிற்சாலை, தையல் பயிற்சி நிலையம், பேக்கரி, வயல்கள் என்பன நிறுவப்பட்டுள்ளன இவற்றை முறையாக நடாத்தி இக்குருகுலத்தை எவரது தயவுமின்றி நடாத்த முன்வரவேண்டும் என்றார்.

## நினைவுத் தூபி திறப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த, வீரமரணமடைந்த 21 தமிழீழ விடுதலைப்புலிகளின் ஞாபகமாக நினைவுத்தூபி வெற்றிலைக் கேணியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## மண்ணில் புதையும் நகரம்

தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்கொக் நாளுக்கு நாள் மண்ணுக்குள் புதையுண்டு வருகிறது. ஆண்டுக்கு 10 c.m க்கு மேல் புதையுண்டு வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 1960 ஆம் ஆண்டு முதல் 1988 வரை 160 c.m அளவு புதையுண்டு இருப்பது தெரிய வந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் 10,00 க்கு மேற்பட்ட கிணறுகள் தோண்டப்பட்டு 12 லட்சம் கனமீற்றர் தண்ணீர் எடுக்கபபட்டு வருவதால் பாங்கொக் நகர் இவ்வாறு புதையுண்டு வருவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். அத்துடன் கட்டடங்களும் அதிகரித்து வருகின்றன. நகரில் மக்கள் தொகை மூன்று மடங்காக அதாவது 76 லட்சமாக அதிகரித்திருப்பதும் ஒரு காரணமாகும்.

## பாடசாலைக்கு

## சீனாவில் மாணவர்களுக்கு

# சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

தியாகி அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தினை சிறப்பாக அனுஷ்டிக்க முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவும், மற்றும் அன்னையர் முன்னணி வெகுஜன அமைப்புக்கள் தங்கள் நிகழ்ச்சிகளை தயார் செய்யும் நோக்கமாக கடந்த 11-03-90 அன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட அலுவலகத்தில் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டியது.

இக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் திரு. திவாகர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன்; அரசியல் கட்சிப்பொறுப்பாளர்கள், கலை கலாசாரப் பொறுப்பாளர்களும் கருத்துக்களை வழங்கியதுடன் கீழ் காணும் நிகழ்ச்சிகளை பிரதேச மாவட்டத்தில் நடாத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்:-

தியாக திருநாட்களில் அஞ்சலி செலுத்தும் வைபவம்.

ஊர்வலம், உண்ணாவிரதம் கிராமங்கள் தோறும் நடாத்தத் தீர்மானம்.

சகல கிராமமட்டத்திலும் பொதுப்பணி செய்தல்.

சிரமதானம், மரம் நாட்டு வைபவம்.

பிரதான மாவட்டத்தில் கலை நிகழ்ச்சிகள்.

இலக்கியப் போட்டிகள்.

பிரதேச பாடசாலை மட்டத்தில் தியாக வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் அமைத்தல்.

பூபதி நினைவு விளையாட்டுவிழா 2ஆம் ஆண்டு பிரதேச மாவட்டத்தில் நடைபெறும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் தியாகி பூபதி நினைவு தினங்களில் நடாத்தப்படுவதுடன் இவை போட்டி நிகழ்ச்சிகளாகவே அமையும் எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சகல மக்களையும் இந் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அதில் பங்குபற்றியும் அன்னையின் தியாகத்தை கௌரவித்து அஞ்சலி செலுத்துமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

---

...1918 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுதந்திர பிரகடனம் இப்போது மீண்டும் செயலுக்கு வருவதாக கூறியுள்ளது. இதைப்பற்றி லித்வானிய சட்ட நிபுணர்கள் குறிப்பிடுகையில் 1940இல் லித்வேனிய குடியரசையும் ஏனைய மூன்று குடியரசுகளையும் கட்டுப்படுத்தி சோவியத் யூனியன் தன்னோடு ஒருபகுதியாக சேர்த்ததாகவும் அப்படிச் சேர்க்க சோவியத் யூனியனுக்கு சட்டபூர்வ உரிமை இல்லை என்றும் கூறினார்.

இதே வேளை லித்வேனியவின் தீர்மானத்தை மதித்து செயற்படுமாறு சோவியத் யூனியனை வலியுறுத்தியுள்ள அமெரிக்கா சகல தரப்பினரும் வன்செயல்களைத் தவிர்க்க வேண்டும் எனக் கோரியுள்ளது.

---

...இருந்து, சைவ மதத்தை வளர்த்து வருவதுடன், அனாதைக் குழந்தைகளுக்கு உணவு, உறைவிடம், கல்வி இன்னோரென்ன பலவற்றையும் வழங்கிவருகிறது.

இவ்வாறு கிளிநொச்சி ஜெயந்திநகர் குருகுல ஆண்டு விழாவிலும், கொடித் தினத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய சர்வோதய பணிப்பாளர்

...யும். கொலைகாரனையும், கள்ளனையும் கூட எமது மதம் விலக்கி வைப்பதில்லை. அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதே சைவசமயம். எமது சமயத்தவர்களுக்குச் சோதனைகள் அதிகம். அதில் சித்தியடைபவர்கள் தான் ஆண்ட...

...தப்பட்ட அச்சகம், ஓடுத் தொழிற்சாலை, தையல் பயிற்சி நிலையம், பேக்கரி, வயல்கள் என்பன நிறுவப்பட்டுள்ளன இவற்றை முறையாக நடாத்தி இக்குருகுலத்தை எவரது தயவுமின்றி நடாத்த முன்வரவேண்டும் என்றார்.

---

## நினைவுத் தூபி திறப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த, வீரமரணமடைந்த 21 தமிழீழ விடுதலைப்புலிகளின் ஞாபகமாக நினைவுத்தூபி வெற்றிலைக் கேணியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

---

## மண்ணில் புதையும் நகரம்

தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்கொக் நாளுக்கு நாள் மண்ணுக்குள் புதையுண்டு வருகிறது. ஆண்டுக்கு 10 c.m க்கு மேல் புதையுண்டு வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 1960 ஆம் ஆண்டு முதல் 1988 வரை 160 c.m அளவு புதையுண்டு இருப்பது தெரிய வந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் 10,00 க்கு மேற்பட்ட கிணறுகள் தோண்டப்பட்டு 12 லட்சம் கனமீற்றர் தண்ணீர் எடுக்கபட்டு வருவதால் பாங்கொக் நகர் இவ்வாறு புதையுண்டு வருவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். அத்துடன் கட்டடங்களும் அதிகரித்து வருகிறன. நகரில் மக்கள் தொகை மூன்று மடங்காக அதாவது 76 லட்சமாக அதிகரித்திருப்பதும் ஒரு காரணமாகும்.

---

## பாடசாலைக்கு மாடிக்கட்டிடம்

(தெல்லிப்பளை)

குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் புதிதாக அமையவுள்ள இரண்டு மாடிக்கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மறைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர்கள் லெப்ரினன்ட் சிறைவாசன், 2ஆம் லெப்ரினன்ட் அனுரா ஆகியோரின் பெற்றோர்களான திரு. நா. தவமணிநாயகம், திருமதி. திலகமணி தவமணி நாயகம், திரு. சிவாசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு அத்திவாரக்கல்லை நாட்டி வைத்தனர்

---

## ஈனாவில் மாணவர்களுக்கு தமிழ் மொழியில் பயிற்சி

(பீக்கிங்)

சீனாவில் தமிழ்மொழிப் பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1962இல் ஆரம்பிக்கப்பட்ட பீக்கிங் வானொலி தமிழ் ஒலிபரப்பில் சீன மாணவர்கள், மாணவிகள் பணிபுரிந்து தமிழ் கற்றுள்ளனர்.

அயல்நாட்டு மொழி பதிப்பகத்தில் தமிழ்மொழி வெளியீட்டுத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1960இல் இக்கல்ரியில் தமிழ் போதிக்கப்படத் தொடங்கியது.

சீனாவில் பீக்கிங், குவாங்கோ, பல்கலைக்கழகங்களிலும் தமிழ்மொழி போதிக்கப்படுகிறது.

மாசேதுங், சூ என்லாய் ஆகிய தலைவர்கள் மறைவுக்குப் பின்னர் தமிழ் நூல் வெளியீட்டு பிரிவு மூடப்பட்டது. பின்னர் 19 9இல் சீனாவின் புதிய சீர்திருத்தக் கொள்கையைத் தொடர்ந்து மீண்டும் தமிழ்மொழி படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

---

## பெய்ரூட்டில் கார் குண்டு வெடிப்பு

(பெய்ரூட்)

லெபனானில் மேற்கு பெய்ரூட்டில் இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் இருபது பேர் வரை காயமடைந்தனர்.

இங்கு இடம்பெற்ற பொறி வெடி விபத்தில் பத்துப்பேர் வரை காயமடைந்தனர்.

---

## சங்கானை பொதுநூலகத்திற்கு விசேட நிதி ஒதுக்கீடு

யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா சங்கானை பொது நூல் நிலைய அபிவிருத்தியின் பொருட்டு விசேட நிதி ஒதுக்கீடு ஒன்றினை வழங்கியுள்ளார்.

சங்கானைப் பொது நூல் நிலையத்திற்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட திரு. டிவகலாலா, நூல் நிலையத்தின் செயற்பாடு, ஒழுங்கு முறை, மக்கள் பயன்பாடு பற்றிய நடைமுறைச் சிறப்புக்களைக் கண்டு மன மகிழ்வும், திருப்தியும் கொண்டதன் விளைவே இவ் விசேட நிதி ஒதுக்க வைத்தது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகம் நடாத்தும் இப்பொது சன நூல் நிலையத்திற்கு, சங்கானை உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. தா. தங்கராசா புதிய நூல்கள் வாங்க மேலும் ஒரு பத்தாயிரம் ரூபா ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

திரு. டிவகலாலாவின் ஆணைக்குட்பட்ட 50 பொது நூல் நிலையங்களையும் அபிவிருத்தி செய்து, மக்கள் நல்ல முறையில் பயனடையச் செய்யும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

அதன் பிரகாரம் மூன்று வருட காலத்தில் சகல நூல் நிலையயங்களும் சகல துறை சார்ந்த நூல்களும் கொண்டதாக அமைக்க நடவடிக்கைகள் 3 வருடத்தில் செயற்படுத்தவுள்ளார்,

அதன் பிரகாரம் முதியவர், இளைஞர், மாணவர், ஆசிரியர் அனைவரும் பயன்பெற உதவுவதற்காக நூல் நிலையங்கள் வளப்படுத்தப்பட்டு விடும் எனக் கருதப்படுகின்றது. (12)

---

## தனியார் வாகன கட்டண அதிகரிப்புக்கு தடை

(வடமராட்சி கிழக்கு)

'வடமராட்சி கிழக்கில் தனியார் வாகனங்கள் கண்டபடி கூடுதலான கட்டணங்களை பிரயாணிகளிடமிருந்து அறவிடுதல் கட்டுப்படுத்தப்படும்.' வடமராட்சி கிழக்கு விடுதலை புலிகளின் மக்கள் விடுதலை முன்னணிப் பொறுப்பாளர் திரு. விக்னு ஆழியவளையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போது இவ்வாறு கூறினர்.

அக்கருத்தரங்கில் திரு. விக்னு தொடர்ந்து உரையாற்றும் போது, ''தனியார் வாகன உரிமையாளர்களை விரைவில் அழைத்து புதிய கட்டணங்களை பற்றி முடிவெடுக்கவுள்ளேன்.

எமது சமுதாயத்தில் கல்வி முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. எனவே கல்வியைச் சீர்குலைக்கும் முயற்சிகள் எதனையும் அனுமதிக்க முடியாது.

வடமராட்சி கிழக்கில் மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஊடாகவே மின்சாரம், வீதிகள் ஆகியன அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட விரோத மதுவிற்பனை மது அருந்தி விட்டு பொதுமக்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் இடையூறு விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

எமது கலை கலாசாரத்தை சீர்குலைக்கும் தென்னிந்திய திரைப்படங்கள், வீடியோக்கள், பாடல்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப்படும்'' என்றார். (36)

---

## ஹாட்லியிலும் மெதடிஸ்ரிலும் சாதனைகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மூன்று மாண[illegible]கள் 4 பாடங்களி[illegible] சித்தி (ஏ) பெற்று[illegible] பருத்தித்துறை [illegible] பெண்கள் உயர்[illegible]லூரியிலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு மாணவி 4 பாடங்களிலும் விசேட சித்தி (ஏ) பெற்றுள்ளார்.

ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோற்றிய செல்வன் எஸ். வரகுமரன், செல்வன் கே. ஆனந்தகுமார், செல்வன் கே. சிவராமன் ஆகிய மூவருமே நான்கு பாடங்களிலும் ''ஏ'' சித்தியைப் பெற்றுக் கொண்டவர்களாவர். பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரியிலிருந்து தோற்றிய செல்வி வாசுகி கணபதிப்பிள்ளை என்பவரே நான்கு பாடங்களிலும் ''ஏ'' தர சித்திகளைப் பெற்றுள்ளார், (25)

---

## கொழும்பு பத்திரிகைச் செய்தி பிரசைகள் குழு மறுப்பு

(பருத்தித்துறை)

இந்தியத் தூதுவராலயம் வெளியிட்ட செய்திக்கு பருத்தித்துறை பிரஜைகள் குழு மறுப்புத் தெரிவித்துள்ளது. ''இந்தியப்படையினருக்கு வடமராட்சி மக்கள் உருக்கமான பிரியாவிடை'' என இந்தியத் தூதுவராலயத்தைமேற்கோள் காட்டி வெளி வந்த செய்தியையடுத்தே பருத்தித்துறை பிரஜைகள் குழு மறுப்புத் தெரிவித்துள்ளது

இது சம்பந்தமாக பருத்தித்துறை பிரஜைகள் குழு விடுத்துள்ள அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொழும்பு பத்திரிகையான்றுஇந்தியபனடயினருக்கு வடமராட்சி மக்கள் உருக்கமான பிரியாவிடை'' என்ற தலைப்பில் முதலாம் பக்கத்தில் வெளிவந்த செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை பருத்தித்துறை பிரஜைகள்குழுவின்சார்பிலும் பொது மக்களின் சார்பிலும் கடும் ஆட்சேபம் தெரிவிக்கின்றோம்.

உண்மைக்குப்புறம்பான அச்செய்தி பொதுமக்கள் வரிசையாகநின்றனர் அமைதிப்படையினருடன் வடமராட்சிப் பகுதியின் முக்கியஸ்தர்களும் பிரஜைகள் குழு அங்கத்தவர்களும் 10 கிலோ மீட்டர் வரை படையினருடனேயே நடந்து வடமராட்சிஎல்லையைக் கடக்கும் வரை பார்த்து நின்றனர் என இந்தியத் தூதராலயத்தை மேற் கோள் காட்டி முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டது கடும் ஆட்சேபத்திற்குரியதாகும் (25)

---

## எரிபொருள் அளக்கும் கருவிகளுக்கு சீல்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட எரிபொருள் நிலையங்களில் உள்ள அளக்கும் கருவிகள் வெகு விரைவில் பரிசேதிக்கப்பட்டு முத்திரை இடப்பட உள்ளது. இங்குள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் மிக உன்னிப்பாக முதலில் அளக்கும் கருவிப்பம்களைச் சரிபார்த்து முத்திரையிடும் சகல வேலைகளும் மிக விரைவில் ஆரம்பமாகுமென யாழ். செயலகநிறுவை அளவைத்திணைக்களப் பொறுப்பதி காரி திரு. கா. நாகலிங்கம் அறியத்தருகின்றார்.

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது என்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்திலும் இத்திட்டம் முதன் முறையாக நடை முறைப் படுத்தப்பட உள்ளது எனத்திணைக்கள அதிகாரி எமது நிருபருக்குத் தெரிவித்துள்ளார். (24)

---

## ஓய்வூதியக் கொடுப்பனவுகளை தபாலகத்திற்கு மாற்றுக

(கொழும்புத்துறை)

இன்று நாட்டில் அமைதியும், ஒழுங்கும் ஏற்பட்டுள்ளதால் 1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயல்பட்டு வந்தது போல் தபால் நிலையங்களில் ஓய்வூதியப் பணங்களைப் பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்து தருமாறும், யாழ் அரசாங்க அதிபர் இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்த பெரும் பாலான ஓய்வூதியக் காரர்கள் ஆவலுடன் எதிர் பார்க்கிறார்கள்.

ஓய்வூதியம் பெறுபவர்கள் வசித்து வரும் தத்தமது பகுதியில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் எதுவித சிரமமுமின்றி நேரில் சென்று தங்கள் மாதாந்த ஓய்வூதியப் பணங்களைப் பெற்றுக் கொள்ள யாழ். அரசாங்க அதிபர் திரு. அ ரன்அல்பிரட் எதிர் வரும் சித்திரை மாதத்தில் இருந்து நடவடிக்கைகளை மேற் கொள்வார் என ஓய்வூதியம் பெறுவோர் எதிர்பார்க்கின்றனர். (24)

## கம்பியூட்டர் பயிற்சி

**SUPER BASIC, BASIC**

புதிய பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும்

17- 03- 1990 சனிக்கிழமை பிற்பகல்

2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் இருபாலாருக்கும் தனித்தனி வகுப்புக்கள் நடத்தப்படும்.

பயிற்சி முடிவில்

பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்கட்கு:

**U. C. M. A ACADEMY**

ஆஸ்பத்திரி சந்தி, அச்சுவேலி.

(B -234)



ஈழமண்ணில் ஓர் ஈழநாதம்

கன்றாய், வளர்ந்து பூர்த்து பூரிப்படையும்

இவ்வேளையில் நீவார மலராகவும்

மக்களுக்கு காட்சி தந்துவிட்டாய்!

வாழ்க பல்லாண்டு உன் நாமம்!

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான மோட்டோர் சயிக்கிள் விற்பனையாளர்கள்

**HONDA, YAMAHA**

முதலிய மோட்டோர் சயிக்கிள்களை நீங்கள் வாங்குவதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

**அன்ரன் என்ரர்பிறைஸ்**

இல. 390, பிரதான வீதி,

(பஸ்தியன் அச்சகச் சந்தி)

யாழ்ப்பாணம்.

(B - 246)



வளர்க ஈழநாதம்!

முதல்தர ஓடுகளின் முன்னணி

விற்பனையாளர்கள்


# சென். ஜோன்ஸ் - ஹாட்லி போட்டி; எவருக்கும் வெற்றியில்லை

(யாழ். விளையாட்டு நிருபர்)

சென். ஜோன்ஸ்கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 175 ஓட்டங்களை 9 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றுள்ளது. இதில் ஜெகேந்திரன் 29 ஓட்டங்களையும், புவனரெட்ணம் 39 ஓட்டங்களையும், பிரசாந்தன் 28 ஓட்டங்களையும், சதீசன் 31 ஓட்டங்களையும், துஸ்பவினோதன ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் விபிஸ்னா ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். முரளி 18 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், பிரசாந்தன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், சதீசன் 6 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். ஹாட்லிக் கல்லூரி (HARTLEY) தனது முதலாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் குலேந்திரன் 25 ஓட்டங்களையும், சிவகுமாரன் 15 ஓட்டங்களையும், பெற்றுள்ளனர். அன்பழகன் 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சிறிஸ்காந்தன் 41 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள். (42)

கனகரட்னம் - மத்திய கல்லூரி

## மழையினால் எவருக்கும் வெற்றியில்லாத போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்றசினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரட்னம் மகா வித்தியாலயம் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 160 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கனகரட்ன மத்திய மகா வித்தியாலய அணித் தலைவர் மிகவும் சிறந்த முறையில் விளையாடி 70 ஓட்டங்களைப் பெற்றார். உதயன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பிரபாகரன் 47 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். முகுந்தன் யாழ். மத்திய கலலூரியின் அணித் தலைவர் மிகவும் சிறப்பாக பந்து வீசி 3 விக்கெட்டுகளை 14 ஓட்டங்களைக் கொடுத்து கைப்பற்றினார்.

யாழ். மத்திய கல்லூரி தனது முதலாவது இனிங்சில் மொத்தம் 119 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ம. சஜித் 35 ஓட்டங்களையும் எஸ். ஜித் 25 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். ரொணி 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், நாதன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயம் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 47 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரொணி 26 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பி. ரமேஸ் 22 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும், ரகுதாஸ் 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். (42)

## வள்ளுவர் விழா

(உரும்பிராய்)

உரும்பிராய் இந்து சமய அபிவிருத்திச்சங்கம் திங்கட்கிழமை திருவள்ளுவர் தின விழாவை நடாத்தியது. திரு. செ. ஐயாத்துரை அவர்களின் தலைமையில் உரும்பிராய் ஞான வைரவர் கோயில் முன்றலில் நடைபெற்ற இவ்விழா திருவள்ளுவர் படத்திற்கு வைத்தியகலாநிதி செ. இந்திராசா அவர்கள் மாலை அணிவித்தலுடன் ஆரம்பமாயிற்று பண்ணிசை ஆசிரியை திருமதி பூமணி நடராசா அவர்களின் தேவாரத்தைத் தொடர்ந்து தலைவர் தலைமையுரையாற்றினார். திருவள்ளுவர் கண்ட இல்லறம் என்ற விடயத்தில் திரு. வே. ஞானகாந்தன் (ஆசிரியர் முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) உரையாற்றினார். (32)

## சிங்கப்பூரில் ஜம்போறி

(உரும்பிராய்)

மேற்படி ஜம்போறி 30/05/90 இலிருந்து 6/06/90 வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது. இலங்கையிலிருந்து ஏழு சாரணர்களும் ஒரு சாரணத்தலைவரும் பங்கு பெற உள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு சாரணத் தலைமைக் காரியால

## சாரணர் ஒன்று கூடல்

(உரும்பிராய்)

யாழ். மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் கடந்த வருடங்களில் (1988,1989) நடாத்திய சாரணத் தலைவர்கட்கான அறிமுகப்பயிற்சி, ஆதாரப் பயிற்சியில் பங்கு பற்றியவர்களை ஒன்று கூட்டி. அவர்கள் மேற்கொண்டு சாரணத்தலைவர்களுக்கான அதி உயர் சின்னமான தரு சின்னப்பயிற்சி பெறுவதற்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சியினை 17/03/90 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராவித்தியாலயத்தில் நடாத்தவுள்ளனர். இதற்கான ஒழுங்குகளைப் பயிற்சிக்குழுச் செயலாளர் மேற் கொண்டு வருகின்றார். (32)


ஈழநாதமே விற்பனையில்

இன்று முன்னணியில் நிற்கின்றாய்

வாழ்க உன் நாமம்

**Sri Meenaakshy Shopping Complex**

பலசரக்கு பொருட்களையும்,


# குடி தண்ணீர் வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகம் குடி நீர் வசதியற்ற, முற்று முழுதாக வறிய மலையக மக்கள் வாழுகின்ற தர்மபுரம் கிராமத்திற்கு குளாய் மூலம் குடிநீர் வழங்கவுள்ளது.

ஏற்கனவே தண்ணீர்த் தாங்கி அமைத்து சுமார் 200 குடும்பங்களிக்குகுளாய்மூலம் குடிநீர் வழங்கி வரும் இக் கழகம் மேலும் 300 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

வெளிநாட்டிலுள்ள றோட்டறிக் கழகம் ஒன்றின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலைத் திட்டம் முடிவடையும் நிலையிலுள்ளதாக மேற்படி கழகத்தின் முன்னை நாள் தலைவர் றோட்டேறியன் எஸ். சிவகுருநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட

சிறுகைத்தொழில் திணைக்களம்

யாழ்ப்பாணம்.

## சிறு கைத்தொழில்களைப் பதிவு செய்தல்

யாழ் மாவட்டத்தில் சிறு கைத்தொழில்களை நடாத்துபவர்களும், புதிதாக ஆரம்பிப்பவர்களும் தமது சிறு கைத்தொழில் முயற்சிகளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் பதிவு செய்தவர்களும், யாழ். மாவட்ட சிறு கைத்தொழில் திணைக்களத்தில் அதற்கான படிவங்களைப் பூர்த்தி செய்து, பதிவு செய்யுமாறு கோரப்படுகின்றனர். புதிய நடைமுறைக்கமைய இது செயல்படுத்தப்படுகின்றது. பதிவு செய்பவர்கள் தமது பதிவை உறுதிப்படுத்துவதற்காக கிராமசேவையாளரால் சிபார்சு செய்யப்பட்டு, உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பதிவுக் கடிதம் அவசியமானது. அத்துடன் வியாபாரப் பதிவுப் பத்திரமும் இணைக்கப்பட வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் உதவிப் பணிப்பாளர், சிறு கைத்தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கீழே கொடுக்கப்பட்ட கைத்தொழில்களைப் பதிவு செய்வதற்குத் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமென தெரிவித்துக் கொள்கிறோம். பதிவுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை 28-03-1990 முதல் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. இறைச்சி, மீன், பாலுணவு உற்பத்திகள்.
2. காய்கறி, பழவகை உற்பத்திகள்,
2. இனிப்பு வகை, பருப்பு வகை, பேக்கரி உற்பத்திகள்.
4. குளிர் பானங்கள், மதுபானங்கள், மதுசாரம்
5. ஏனைய உணவு வகைகளும், புகையிலையும்
6. பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள், பெற்றோலியம் தொடர்பான இரசாயன உற்பத்திகள்.
   (Petrolium, Petrolium Products & Iron Chemical)
7. உப்பும், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொருட்களும்.
   (Salt and Salt based Chemicals)
8. ஏனைய இரசாயன வகைகள்.
9. மருந்து வகைகள், மருத்துவ சாதனங்கள், வாசனைப் பொருட்கள்.
10. சவர்க்காரம், விலங்கு தாவர எண்ணெய், கொழுப்பு.
    (Soap, Vegetable & Animal Oil, Fats.)
11. தோல், றப்பர் உற்பத்திகள்.
12. கரிமண், சீமேந்து என்பவற்றால் ஆகும் உற்பத்திகள்.
13. அடிப்படை உலோகக் கைத்தொழிலும், இயந்

## அன்ரன் என்ரர்பிறைஸ்

இல. 390, பிரதான வீதி,
(பஸ்தியன் அச்சகச் சந்தி)
யாழ்ப்பாணம்.

(B - 246)


வித்தலுடன் ஆரம்பமாயிற்று பண்ணிசை ஆசிரியை திருமதி பூமணி நடராசா அவர்களின் தேவாரத்தைத் தொடர்ந்து தலைவர் தலைமையுரையாற்றினார். திருவள்ளுவர் கண்ட இல்லறம் என்ற விடயத்தில் திரு. வே. ஞானகாந்தன் (ஆசிரியர் முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) உரையாற்றினார். (32)

3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயம் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 47 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரொணி 26 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பி. ரமேஸ் 22 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும், ரகுதாஸ் 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். (42)

பெறுவதற்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சியினை 17/03/90 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராவித்தியாலயத்தில் நடாத்தவுள்ளனர். இதற்கான ஒழுங்குகளைப் பயிற்சிக்குழுச் செயலாளர் மேற்கொண்டு வருகின்றார். (32)


2. இனிப்பு வகை, பருப்பு வகை, பேக்கரி உற்பத்திகள்.
4. குளிர் பானங்கள், மதுபானங்கள், மதுசாரம்
5. ஏனைய உணவு வகைகளும், புகையிலையும்
6. பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள், பெற்றோலியம் தொடர்பான இரசாயன உற்பத்திகள்.
   (Petrolium, Petrolium Products & Iron Chemical)
7. உப்பும், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொருட்களும்.
   (Sait and Salt based Chemicals)
8. ஏனைய இரசாயன வகைகள்.
9. மருந்து வகைகள், மருத்துவ சாதனங்கள், வாசனைப் பொருட்கள்.
10. சவர்க்காரம், விலங்கு தாவர எண்ணெய், கொழுப்பு.
    (Soap, Vegetable & Animal Oil, Fats.)
11. தோல், றப்பர் உற்பத்திகள்.
12. கரிமண், சீமேந்து என்பவற்றால் ஆகும் உற்பத்திகள்.
13. அடிப்படை உலோகக் கைத்தொழிலும், இயந்திரங்களும் (போக்குவரத்துக்கான இயந்திர சாதனம் அல்லாதவை)
14. இரும்பல்லாத உலோக உற்பத்திகள் (இயந்திர சாதனம் அல்லாதவை)
    (Forrows and Non Forrows Metal Products other than Machinery.)
15. போக்குவரத்து சாதனங்களும், அவற்றிற்கான உதிரிப் பாகங்களும்.
16. மின் உபகரணங்கள்.
17. கண்ணாடி வகை, படம் பிடிக்கும் சாதனங்கள், துல்லியம் ஆகியன.
    (Optical and Photographic Goods and Precesion Industries)
18. மரச்சக்கை, கடுதாசி உற்பத்தி.
    (Manufacture of Wood Pulp & Paper Products)

ந. கனகசுந்தரம்பிள்ளை
உதவிப் பணிப்பாளர்,
சிறுகைத்தொழில் பகுதி,
யாழ். அரச அதிபருக்காக

(B/249)



வளர்க ஈழநாதம்!

முதல்தர ஓடுகளின் முன்னணி விற்பனையாளர்கள்

## மு. தா. சோமசுந்தரம் அன் சன்ஸ்

199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B.250)


## சிங்கப்பூரில் ஜம்போறி

(உரும்பிராய்)

மேற்படி ஜம்போறி 30/05/90 இலிருந்து 6/06/90 வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது. இலங்கையிலிருந்து ஏழு சாரணர்களும் ஒரு சாரணத்தலைவரும் பங்கு பெற உள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு சாரணத் தலைமைக் காரியாலயம் நடாத்தவுள்ளது. ஜம்போறிக்கு செல்லவுள்ள சாரணர்கள் முதலாம் தரச் சின்னம் சித்தியடைந்தவர்களும் 15/03/90 இல் பதினாறு வயதிற்கு கீழ் உள்ளவர்களுமாவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (32)


ஈழநாதமே விற்பனையில்
இன்று முன்னணியில் நிற்கின்றாய்
வாழ்க உன் நாமம்

## Sri Meenaakshy Shopping Complex

பலசரக்கு பொருட்களையும்,
மருந்து வகைகளையும்,
சிறுவர்களுக்கு ஏற்ற விற்றமின்
ரொணிக் வகைகளுக்கும்
நம்பிக்கையின் முன்னோடிகள்

## ஸ்ரீ மீனாட்சி சொப்பிங் கொம்ளெக்ஸ்

இல. 430 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B 242)


## அம்மன் ஆலய ராஜகோபுரம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்மன் ஆலய இராஜகோபுர வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இன்று காலை இராஜகோபுரத்திற்கானபடிக்கல் நாட்டலும், எதிர்வரும் 17ஆம் திகதி நிலைக்கல்வைத்தல் வைபவமும் நடைபெறவிருக்கின்றன. வருகிற சித்திரா பூரணை தினத்தில்தேர் தீர்த்த திருவிழா நடைபெற விருக்கிறது (19)


நீங்கள் வெற்றிவீரர்கள் ஆகவேண்டுமா?

- உதைபந்தாட்டம்
- கிரிக்கெட்
- பற்மின்ரன்
- கரம்

முதலிய விளையாட்டுக்களில் பங்குபற்றி உலகச் சம்பியன் பட்டத்தை எடுக்க வேண்டுமா?

இன்று யாழ்நகரில் நீங்கள் நாடவேண்டிய இடம்

## யாழ் என்ரர்பிறைஸ்ஸஸ்

இல. 516, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B.247)


## நன்கொடை

(தெல்லிப்பளை)

[redacted]ந்திய இராணுவத்தின [redacted] தைப் பொங்கல் [redacted] சுட்டுக்கொல்லப் [redacted]லங்கை வங்கி ஊழியர் [redacted] சோதிலிங்கத்தின் குடும்பத்தினருக்கு இலங்கை வங்கி ஊழியர் சங்கம் இருபத்தையாயிரம் ரூபாவினை மரண நன்கொடையாக வழங்கியது. (26)

## மெய்வல்லுனா போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு சிறீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தின் மெய்வல்லுனர் போட்டிகள் இன்று இரண்டு மணியளவில் நடைபெறும் இதற்கு பிரதம விருந்தினராக திரு சி. தியாகராஜா உதவி கல்வி பணிப்பாளர் அவர்கள் கலந்து கொள்வார் என வித்தியாலய நிர்வாகம் அறிவித்துள்ளது.


வீரவேங்கைகள் யாழ் நகரில்
வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கொலைகள், களவுகள்
இவர்களின் வட்டத்தினால் அழிந்துவிட்டது-
வாழ்க இவர்களின் நாமம்! மலர்க !! வெல்க !!!

A. C. C. கேபில்ஸ், மின்சார உபகரணங்கள்,

யாழ்நகரில் மொத்த விற்பனையாளர்கள்,

நம்பிக்கையின் ஏக விநியோகஸ்தர்கள்.

## A. சிறிபாஸ்கரன்

இல. 442,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/248)

## சிந்தனைக்கு

நாட்டிலவமதிப்பும்
நாணின்றி இழிசெல்வத்
தேட்டில் விருப்புங்கொண்டே - கிளியே
சிறுமையடைவாரடி

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14 - 03 - 90

# பிதற்றலா பித்தலாட்டமா?

"வகுப்பில் முதல் பிள்ளை யார்?" என்று சிறுவனைப் பார்த்து ஒருவர் கேட்டார்.

"நான்தான்" என்று 'பட்'டென்று பதிலளித்தான் பையன். "உங்கள் வகுப்பில் எத்தனை பிள்ளைகள்?" என்று மீண்டும் கேள்வி கேட்டதும் "ஒரேயொரு பிள்ளை, நான்தான்" என்று பவ்வியமாகப் பதிலளித்தான் சிறுவன்.

"நான் நாட்டைவிட்டு ஓடமாட்டேன். எவர் வெளியேறினாலும் நான் ஓடமாட்டேன். ஈழ ஜனநாயகக் குடியரசுப் பேரவையை திட்டமிட்டபடி மே மாதம் ஏழாந் தேதி கூட்டுவேன்" என்று வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் (சபாநாயகர்) பொன்ராம் ராஜகாரியர் கூறியதாக ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

திருகோணமலையிலிருந்து இப்படிக் கூறிய ராஜகாரியர் அடுத்துக் கொழும்புக்குப் பயணமானார்.

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் எங்கே இருக்கிறார் என்பது இத் தலையங்கம் எழுதும் வரை தெரியவில்லை.

இந்திய விமானப்படை விமானத்தில் இந்தியா சென்றுவிட்டார் என்று முதலில் செய்திகள் தெரிவித்தன.

திரு. பெருமாள் இந்தியாவுக்கு வரவில்லை என்று புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்திகள் கூறின.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் வரதராஜப் பெருமாள் இந்தியாவுக்குப் போகவில்லை என்று தெரிவித்தது. உண்மையில் பெருமாள் இந்தியா சென்றார் என்ற செய்தியை இந்தியத் தூதரகமும்

## பாலஸ்தீப் பிரச்சினைகளை

# சர்வதேச மகாநாடு மூலம் தீர்க்க இஸ்ரேல் விரும்பவில்லை

நேற்றைய தொடர்ச்சி

ஜோடான் நாட்டின் குடித்தொகையில் குறிப்பிடத்தக்க வீதத்தினர் பாலஸ்தீனர் என்பதால் காஸா, மேற்குக்கரையிலுள்ள பாலஸ்தீனரும் இவர்களுடன் சேரும் பொழுது ஜோடானின் குடித்தொகையில் இவர்கள் பெரும் பான்மையினராகவிரும்பர். இதனால் பாலஸ்தீனர்கள் அபிலாசைகளை ஜோடானின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளலாமென்றும் இஸ்ரேல் கருதுகிறது, ஜோடான் மத்திய தரைக்கடலில் துறைமுகவசதிகளைப் பெறுவதும் தனது பொருளாதாரத்தைப் பலப்படுத்துதற்கும் மேற்குக் கரையையும் காஸாவையும் தனது ஆட்சிக்குட்படுத்த 1988க்கு முன்பு விரும்பியிருந்தது. இதனால் இவ்விடயத்தில் ஜோடான் தனது தற்போதைய நிலையை மாற்றலாமெனஇஸ்ரேல் எதிர்பார்க்கிறது, இஸ்ரேல் இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்தை மாற்றுத் தீர்வாக வைத்துள்ளது.

ஒன்று இன்னொரு அரசு ஜெருசலத்திற்கும் அம்மானுக்குமிடையில் ஏற்படுவதைத் தடுத்தல். மற்றது தனது நாட்டுக்குள் அராபியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல். ஜோடான் ஆட்சிக்குக்கீழ் மேற்குக்கரை, காஸாபகுதிகள் மீண்டும்வருமிடத்து இப்பகுதிகளை இராணுவமயமற்றதாக்க வேண்டுமெனறும், ஜோடான் ஆற்றுக்கு மேற்கே ஜோடானின்படைகளைநிலைகொள்ள அனுமதிக்க முடியாதென்பதும் இஸ்ரேலின் ஆவிவ் பாதுகாப்புக்கு உகந்ததில்லையென இஸ்ரேல் கருதுகிறது.

இதனால் ஐக்கியநாடுகள் சபையின் 242 ஆவது இலக்கத் தீர்மானப்படி 1967 ஆம் ஆண்டு எல்லைக்குள் இஸ்ரேல் மீளச் செல்லும்படி கேட்கப்பட்ட பொழுதும் பாதுகாப்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைக்குள் இப்பகுதி நாடுகள் சுதந்திரமாக இருக்க உரிமையுள்ளனவென்ற குறிப்பைத் தனக்குச் சாதகமாக விளக்கமளித்து இஸ்ரேல் மேற்குக்கரை எல்லையில் மாற்றம் செய்யவிரும்புகிறது. 1967ஆம் ஆண்டு யுத்தத்தின் பின் மேற்குகரை எல்லை முன்னரங்கு அராயியக் கிராமங்கள் அழிக்கப்பட்டும் அராபிய யூதர்வாழும் பகுதிகளின் எல்லையின் நீளம் குறைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. 1967 ஆம் ஆண்டு எல்லையை மீளாய்வு செய்யுமிடத்து அதன் நீளத்தைக் குறைப்பதிலும் பரப்பு பாதுகாப்பு வீடயங்களிலும் தனக்குச் சாதகமான நிலமை அமையவேண்டுமெனஇஸ்ரேல் கருதுகிறது.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலத்தைக் (பழைய நகரம்) கைப்பற்றி பிரிக்கப்பட்டிருந்த ஜெருசலம் நகரின் கிழக்கு மேற்குக் பிரிவுகளை ஒன்றாக்கியதுடன் 1980 இல் இஸ்ரேலின் ஒரு பகுதியாக மாற்றியுள்ளது. ஜெருசலம் இஸ்ரேலின் நெருப்புக்களைத் தவிர்த்தும் இணைத்துள்ளது.

> இஸ்ரேல் பகுதியிலிருந்து யுத்தங்களினாலும், மாற்று கட்டாயப் படுத்தலினாலும் வெளியேறியும், வெளியேற்றப்பட்டும் அகதிகளாகப் பாலஸ்தீனத்திலும் பிற அராபிய நாடுகளிலும் உள்ள முகாம்களில் வாழ்வோரும் வெளி நாடுகளில் வாழ்வோரும் பாலஸ்தீனத்துக்குள் அதாவது இஸ்ரவேலுக்குள் மீளக் குடியேறுவதை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளாது.

1967 இல் 65,000 ஆக இருந்த கிழக்கு ஜெருசல அராபியர்களின் எண்ணிக்கை இன்று 100,000க்கு மேற்பட்டுள்ளது. இஸ்ரேல் ஒருங்கிணைக்கப்பட்ட ஜெருசலத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தி பிற நகர்களிலிருந்த நிறுவனங்களை ஜெருசலத்துக்கு நகர்த்தி இந் நகரில் குறிப்பாக கிழக்குப் பகுதியில் யூதர்களின் செல்வாக்கையும், குடியிருப்புகளையும் இக்காலத்தில் அதிகரித்துள்ளது மேலும் பௌதீக ரீதியில் நகரின் கிழக்குப்பகுதியை யூதப் பண்பு கொண்டதாக மாறிவருகின்றது. அதனால் ஜெருசலத்தை விட்டுக்கொடுக்கவோ, பிரிக்கவோ இஸ்ரேல் உடன்படமாட்டாது. ஜெருசலம் இஸ்ரேலின் தலைநகரமாக இருந்த பொழுதும் பலநாடுகள் 1980 இல் கிழக்கு ஜெருசலத்தை இணைத்ததனை ஏற்றுக் கொள்ளாது தங்கள் தூதுவராலயங்களை டெல்-ஆவிக்கு இடமாற்றின. இதனால் ஜெருசலத்தை இஸ்ரேலின் நிலைப்பேறுடைய, பிரிக்கமுடியாத தலைநகர் எனக்கொண்டு, இந் நிலைப்பாட்டுக்குள்ளேயே அராபியர்களினதும், ஏனைய சமயத்தவர்களினதும் உரிமைகள், நலன்கள் ஆகியவற்றை பாதுகாக்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க உடன்படும்.

பாலஸ்தீன அகதிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது [illegible] இடம் பெற்றாலும், இஸ்ரேல் பகுதியிலிருந்து யுத்தங்களினாலும், மாற்று கட்டாயப் படுத்தலினாலும் வெளியேற்றப்பட்டும் அகதிகளாகப் பாலஸ்தீனத்திலும் பிற அராபிய நாடுகளிலும் உள்ள முகாம்களில் வாழ்வோரும் வெளிநாடுகளில் வாழ்வோரும் பாலஸ்தீனத்துக்குள் அதாவது இஸ்ரேலுக்குள்

நாட்டு மக்களே அதாவது தொழிற் சேனையே படைவீரர்களாக மாறுவதால் நீண்டகால யுத்தம் இடம்பெறுமாயின் நாட்டின் பொருளாதாரம் பதிக்கப்படுமானதால் செறிவாக யுத்த தந்திரத்தை அது கைக்கொள்கின்றது. மேலும் அராபிய அல்லது இஸ்லாமிய உலகில் அணு ஆயுத உற்பத்தி இடம் பெறுவதை விரும்பவில்லை. அணுவாயுதம் செய்யப்படுமிடத்து அது தனக்கு எதிராக பயன்படுத்தப்படலாம் என அஞ்சுகின்றது. ஈராக் அணு ஆராச்சி நிலையத்தைத் தாக்கியதற்கு இதுதான் முக்கிய காரணமென்று கூறப்படுகின்றது.

அமெரிக்க நிலைப்பாட்டை நோக்குமிடத்து, மத்தியகிழக்கில் இராணுவ ரீதியில் இஸ்ரேல் அராபியாவிலும், பாலஸ்தீனத்திலும் பார்க்க மேம்பட்ட நிலையில் இருப்பதற்கு உதவ வேண்டுமென்றும், பாலஸ்தீன அரசு இப்பிரதேசத்தில் தோற்றுவிக்கப்படுமாயின் அது ஸ்திரத்தன்மை ஏற்படுத்தக் கூடியதுடன், இஸ்ரேல் நலனையும் பாதிக்குமெனவும் அது கருதுகிறது. பாலஸ்தீனப் பிரச்சினைக்கு ஜோடான் மூலம் ஒரு தீர்வு ஏற்படுவதை அமெரிக்கா விரும்புகிறது. இதனால் ஜோர்டான் மூலம் தீர்வை ஏற்படுவதை அமெரிக்கா விரும்புகிறது. இதனால் ஜோர்டான் மூலம் தீர்வை ஏற்படுத்தக் கூடிய பாலஸ்தீனத்தை தலைமைத்துவத்தைப் பலப்படுத்த அது விரும்புகிறது. தற்பொழுது இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளில் ஏற்பட்டுவரும் கிளர்ச்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சாதாரண நிலையைத் தோற்றுவிக்க விரும்புகிறது. பாலஸ்தீனத்தில் கிளர்ச்சி தணிந்தால் அராபிய உலகில் தனக்குள்ள எதிர்ப்பும் வெறுப்பும் குறைவடையலாமென அமெரிக்கா

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D. Durham**

## ஊர்சுற்றி

எழுதுவது

இப்பொழுது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் வெளியூர்ப்(கொழும்பு) பத்திரிகையாளர்களும் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்து வரத் தொடங்கியிருக்கிறார்கள்.

சிறிது காலம் இவர்கள் யாழ்ப்பாணத்தை "எட்டிப்பார்ப்பதற்கும்" இவர்களுக்கு அனுமதிவழங்கப்படவில்லை.

இவர்களுக்குப் பதிலாக பூவராகவன், திருநாவுக்கரசு, பெருமாள், சுந்தரம் சுப்பிரமணியம் என்ற "ஆல் இந்திய ரேடியோ" நிருபர்கள் அடிக்கடி வந்து இங்கே முகாம்களில் முகாம் போட்டு, 'நேசக் கரங்கள்' 'அன்பு வழி', 'வெற்றி மாலை' என்று தமிழ் நாட்டு ரோடியோ நிகழ்ச்சிகளில் கதை விட்டுக் கொண்டிருந்தார்கள். போதாததற்கு தூரதர்ஷன் தொலைக் காட்சியில் வரதராஜப் பெருமாளையும் அமைதிப்படை இங்கிருந்து போகக்கூடாது என்று ஏற்பாடு செய்யப்பட்ட சில ஆர்ப்பாட்டங்களையும் அபிப்பிராயங்களையும் ஒளிபரப்பிவந்தார்கள்.

சிறிலங்கா அரச படைகளுடன் போராளிகள் மோதிக்கொண்டிருந்த போது வெளிநாட்டு நிருபர்கள் சிலர் வந்துபோய்க் கொண்டிருந்தனர். டேவிட் செல்போர்ன் என்பவர் இலங்கைக்கு வந்து திரும்பிச் சென்று எழுதிய கட்டுரை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இக் கட்டுரையை வெளியிட்டதற்காக "சற்றர்டே றிவியூ" பத்திரிகைமீது பத்திரிகைக் கவுன்சிலில் அமைச்சர் அமைச்சர் லலித் அத்துலத் முதலி வழக்கும் தாக்கல் செய்தார்.

இவ் வழக்கிற்குச் செலவிடுவதற்கு வாசகர்களிடமிருந்து ஐம்பது சதம் வசூலித்தார், அதன் ஆசிரியர் காமினி.

இதன் பின்னர் வெளிநாட்டுநிருபர்களுக்கு இங்கு வருவதற்கு கடுமையான தடை விதிக்கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இங்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்திய அமைதிப் படையின் ஆட்சிக் காலத்திலும் சர்வதேச செஞ்சிலுவைப் சங்கப் பிரதிநிதிகளுக்கு கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும்

திருகோணமலையிலிருந்து இப்படிக் கூறிய ராஜ காரியர் அடுத்துக் கொழும்புக்குப் பயணமானார்.

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரத ராஜப்பெருமாள் எங்கே இருக்கிறார் என்பது இத் தலையங்கம் எழுதும் வரை தெரியவில்லை.

இந்திய விமானப்படை விமானத்தில் இந்தியா சென்றுவிட்டார் என்று முதலில் செய்திகள் தெரிவித்தன.

திரு. பெருமாள் இந்தியாவுக்கு வரவில்லை என்று புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகச் செய்திகள் கூறின.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் வரதராஜப் பெருமாள் இந்தியாவுக்குப் போகவில்லை என்று தெரிவித்தது. உண்மையில் பெருமாள் இந்தியா சென்றார் என்ற செய்தியை இந்தியத் தூதரகமும் டில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியும் மறுத்திருக்கின்றனர்.

ஆனால் ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் கே. பத்மநாபாவும் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பத்துப்பேரும் மற்றும் இரு அமைச்சர்களும் இந்திய விமானப்படை விமானத்தில் இந்தியா சென்று ஒரிசா போய்ச் சேர்ந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஈ. பி. ஆர், எல். எவ். உறுப்பினர்கள் அனைவரும் திருகோணமலையை விட்டு வெளியேறிவிட்டனர். அமைச்சர்களும் அங்கே இல்லை. முதலமைச்சர் எங்கே என்று தெரியாது.

வடக்கு கிழக்கு மாகாண சபையை ''ஈழ ஜனநாயக குடியரசாக'' பிரகடனப்படுத்த ஒரு வருட அவகாசம் கொடுத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது 'ரெலோ' உறுப்பினர்களும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் அதை ஆதரிக்கவில்லை. தொடர்ந்து மாகாணசபைக் கூட்டங்களைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் இவர்கள் அறிவித்திருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாண சபை அதிகாரிகளும் வெளியேறிவிட்டனர்; ஊழியர்களும் லீவில் சென்றுள்ளனர்.

இந்நிலையில் ''எவர் வெளியேறினாலும் நான் நாட்டை விட்டு ஓடமாட்டேன்; திட்டமிட்டபடி மே மாதம் ஏழாந்தேதி ஈழ ஜனநாயக குடியரசின் பேரவையைக் கூட்டுவேன்'' என்று ராஜகாரியர் கூறியிருப்பது, ''வகுப்பில் முதல் பிள்ளை, அவன்தான் ஒரே பிள்ளை'' என்ற கதைபோல்தானிருக்கிறது!

இந்திய மண்ணிலிருந்து இலங்கைக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதற்கு எந்தக் குழுவும் அனுமதிக்கப் படமாட்டாது என்று இந்தியாவின் வி. பி. சிங் அரசு தெட்டத் தெளிவாக அறிவித்திருக்கிறது.

இந்நிலையிலும் ''ஈழப்பிரகடனம்'' என்றும் பேரவைக் கூட்டமென்றும், ''அக்கரையிலிருந்து ஈழத் தமிழ் மக்களுக்காகப் போராடுவோமென்றும்'' கூறுவது சன்னி கண்டவனின் கடைசிநேரப் பிதற்றலா இல்லை பித்தலாட்டமா?

---

1988க்கு முன்பு [illegible] தது. இதனால் இவ்விடயத்தில் ஜோடான் தனது தற்போதைய நிலையை மாற்றலாமென இஸ்ரேல் எதிர்பார்க்கிறது, இஸ்ரேல் இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்தை மாற்றுத் தீர்வாக வைத்துள்ளது.

ஒன்று இன்னொரு அரசு ஜெருசலத்திற்கும் அர்மானுக்குமிடையில் ஏற்படுவதைத் தடுத்தல். மற்றது தனது நாட்டுக்குள் அராபியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல். ஜோடான் ஆட்சிக்குக்கீழ் மேற்குக்கரை, காஸாபகுதிகள் மீண்டும்வருமிடத்து இப்பகுதிகளை இராணுவமயமற்றதாக்க வேண்டுமெனறும், ஜோடான் ஆற்றுக்கு மேற்கே ஜோடானின்படைகளைநிலை கொள்ள அனுமதிக்க முடியாதென்பதும் இஸ்ரேலின் நிலைப்பாடு.

மேலும் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்குமிடையில் சாமதானத்தீர்வு ஒன்று ஏற்பட்டாலும் கூட இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டுக்கு முன்னைய எல்லைக்குத் திரும்ப மறுக்கிறது. 1949 ஆம் ஆண்டு எல்லை ஒரு போர் நிறுத்தக் கோடாக இருந்ததும் பல இடங்களில் எல்லைகள் பாதுகாப்பு நோக்கில் சீராகவில்லாது உள் நோக்கியும் வெளி நோக்கியும் பலவளைவுகளைக் கொண்டும் பொருளாதார செயல் பண்புகளில் காணப்படும் குறைகளை மாற்றம் ஏற்படுத்த விரும்புகிறது. மேற்குக்கரை எல்லைக்கும் டெல் ஆவிவ்வுக்கும் இடையில் 12 மைல் தூர இடைவெளி இருப்பது இஸ்ரேலின் டெல்

[illegible] எல்லையின் நீளம் குறைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. 1967 ஆம் ஆண்டு எல்லையை மீளாய்வு செய்யுமிடத்து அதன் நீளத்தைக் குறைப்பதிலும் பரப்பு பாதுகாப்பு வீடயங்களிலும் தனக்குச் சாதகமான நிலமை அமையவேண்டுமெனஇஸ்ரேல் கருதுகிறது.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரேல் கிழக்கு ஜெருசலத்தைக் (பழைய நகரம்) கைப்பற்றி பிரிக்கப்பட்டிருந்த ஜெருசலம் நகரின் கிழக்கு மேற்குக் பிரிவுகளை ஒன்றாக்கியதுடன் 1980 இல் இஸ்ரேலின் ஒரு பகுதியாக மாற்றியுள்ளது. ஜெருசலம் இஸ்ரே

[illegible] களினதும், ஏனைய சமயத்தவர்களினதும் உரிமைகள், நலன்கள் ஆகியவற்றை பாதுகாக்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க உடன்படும்.

பாலஸ்தீன அகதிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது [illegible] இடம் பெற்றாலும், இஸ்ரேல் பகுதியிலிருந்து யுத்தங்களினாலும், மாற்று சட்டாயப் படுத்தலினாலும் வெளியேற்றப்பட்டும் அகதிகளாகப் பாலஸ்தீனத்திலும் பிற அராபிய நாடுகளிலும் உள்ள முகாம்களில் வாழ்வோரும் வெளிநாடுகளில் வாழ்வோரும் பாலஸ்தீனத்துக்குள் அதாவது இஸ்ரேலுக்குள்

படுவதை அமெரிக்கா விரும்புகிறது. இதனால் ஜோர்டான் மூலம் தீர்வை ஏற்படுவதை அமெரிக்கா விரும்புகிறது. இதனால் ஜோர்டான் மூலம் தீர்வை ஏற்படுத்தக் கூடிய பாலஸ்தீனத்தை தலைமைத்துவத்தைப் பலப்படுத்த அது விரும்புகிறது. தற்பொழுது இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளில் ஏற்பட்டுவரும் கிளர்ச்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சாதாரண நிலையைத் தோற்றுவிக்க விரும்புகிறது. பாலஸ்தீனத்தில் கிளர்ச்சி தணிந்தால் அராபிய உலகில் தனக்குள்ள எதிர்ப்பும் வெறுப்பும் குறைவடையலாமென அமெரிக்கா

## பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D. Durham

லின் பிரிக்கமுடியாத நிலைபேறுடைய தலைநகரமென்று கருதுகின்றது. கிழக்கு ஜெருசலத்தையே யூதர்களின் புலம்பல் மதில் அமைத்துள்ளது. ஜெருசலம் நகரைக் கைப்பற்றிய இஸ்ரேல் பழைய நகரில் மதிலுக்குட்பட்ட பழைய யூதக்குடியிருப்புப்பகுதியை மீண்டும் புனருத்தாரணம் செய்ததுடன் புலம்பல் மதிலுக்கு முன்பாகவிருந்த அராபிய வாழிடப்பரப்பைத் கூப்பரவு செய்தால் 5000 க்கு மேற்பட்ட அராபிய மக்கள் இடம் பெயர வேண்டியதாயிற்று. 70 சதுர கிலோ மீற்றர் கிழக்கு ஜெருசலத்தை இஸ்ரேல் இணைத்தபொழுது முடிந்தளவு கூடிய நிலபபரப்பு வரக்கூடியதாகவும் அதே நேரத்தில் அராபியக் குடியி

மீளக் குடியேறுவதை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளாது.

பாலஸ்தீனரை இஸ்ரேலுக்குள் குடியேற்றிவிட்டால் இஸ்ரேலின் தற்போதைய குடிசனப் பண்பில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு நாடு யூதப் பண்பை இழந்துவிடும் என்பது இஸ்ரேலின் நிலைப்பாடாகும்.

பாலஸ்தீனப் பிரச்சினை குறித்து சர்வதேச மாநாடு ஒன்று கூட்டுவதை இஸ்ரேல் இன்று விரும்பவில்லை. சர்வதேச மகாநாடு இடம்பெறுமிடத்து அது பாலஸ்தீனருக்குச் சாதகமாக அமையும் என்றும் இங்கு பங்குபற்றும் அங்கத்துவ நாடுகள் தன் மீது கூடிய அழுத்தம் செலுத்துமெனவும் அது கருதுகின்றது. அமெரிக்கா தவிர்ந்த ஏனைய வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் பாலஸ்தீனப் பிரச்சினையில் சுயநலம் காண்பதில் ஈடுபடலாம் என்றும் இஸ்ரேல் கருதுகிறது. இதற்குப் பதிலாகப் பாலஸ்தீனரால் தெரிவு செய்யப்பட்ட மிதவாதப் போக்குடைய தலைமைத்துவத்துடன் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட அது விரும்புகிறது. அதாவது தனிநாட்டுக்கோரிக்கையை வலியுறுத்தாத பாலஸ்தீனப் பிரிவினருடன் பேச விரும்புகிறது.

இஸ்ரேல் தன்னிலும்பார்க்க அயல் அராபிய நாடு[illegible] இராணுவ ரீதியில் பலம்பெ[illegible] றிருப்பதை விரும்பவி[illegible] இராணுவரீதியில் அரபு நாடுகள் கூடுதலாகப் பலம் பெறும் போது இஸ்ரேல் அவர்களுடன் யுத்தத்தை தானே முதல் தொடங்கி அவர்களின் பரப்பிலே குறுகிய காலத்துக்குள் அதனை நடத்தி எதிரியை முறியடிக்கும் யுத்தத்திறமுறையை இதுவரையும் கடைப்பிடித்து வந்துள்ளது. இஸ்ரேலின் நிலப்பரப்பு சிறியதாக இருப்பதால் எதிரியின் பரப்பில் சண்டையிடும் திறமுறை காணப்படுகின்றது.

உணர்கிறது. பாலஸ்தீனப் பிரச்சினை குறித்து சர்வதேச மகாநாடு இஸ்ரேல் விரும்புமிடத்துத்தான் இடம்பெற வேண்டுமென்றும் அமெரிக்கா விரும்புகிறது.

எகிப்து, ஜோர்டான் மற்றும் மிதவாத அரபு நாடுகள் பாலஸ்தீனப் பிரச்சினையில் முன்னர் மாதிரி கடினபோக்கைக் கடைப்பிடிக்க விரும்பவில்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் குறிப்பாக அமெரிக்கா மேற்குலகத்தின் ஊடாக இஸ்ரேல் மீது செலுத்தும் அழுத்தத்தின் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண அவை விரும்புகின்றன. சர்வதேச ரீதியில் இராஜீக முறையில் இப்பிரச்சினையை மேலும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இஸ்ரேலையும் அதன் நட்பு நாடான அமெரிக்காவையும் மனமாற்றத்துக்குட்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென மேற்குறித்த நாடுகள் நினைக்கின்றன. எனினும் லிபியா, சிரியா, அல்ஜீரியா போன்ற நாடுகளின் நிலைப்பாடு இதற்கு வேறுபட்டதாக உள்ளது.

1967ஆம் ஆண்டுபோருக்குப் பின்னர் ரூமேனியா தவிர்ந்த ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுடன் இராஜீக [illegible]றவை முறியடித்துக் [illegible]ன. அண்மையில் கங் [illegible]பாலந்து, செக்கோ[illegible]க்கியா மீண்டும் இஸ்ரே[illegible] உறவை ஏற்படுத்தி [illegible]து. கிழக்கு ஜேர்மனி இஸ்ரேலுடன் உறவை விருத்தி செய்ய விரும்புகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீனப் பிரச்சினையில் பாலஸ்தீனருக்குச் சாதகமாக இருந்தாலும் இஸ்ரேலுக்கு எதிரான கடின நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டன. மேலும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுவரும் பெரும் அரசியல் மாற்றங்களினால் இந்நாடுகளிலிருந்து யூதர்கள் இஸ்ரேலுக்கும் இடம்

(6ஆம் பக்கம் பார்க்க)

---

## மீளக் குடியமர்வுக்கான நிவாரணம்

ஆசிரியர்
ஈழநாதம்

22-10-1987ஆம்ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படை எனது வீட்டைமுற்றக எரித்து விட்டது நாங்கள் மூன்று மாதங்களாக உடுக்க உடையின்றி ஆற இடமின்றி எனது மனைவி, பிள்ளைகள் கோவிலில் தஞ்சம் புகுந்திருந்தோம் அப்போது தான் மீளக் குடி

## மக்கள் மடல்

அமர்வுக்கான பணக் கொடுப்பனவு ஆரம்பமானது. எனது குடும்பத்திற்கும் ஒரு அறிமுக அட்டை தந்தார்கள். அதன் இலக்கம் NL /5/55/01/187 ஆகும். ஆனால்இற்றைவரைக்கும் எனது குடும்பத்திற்கு அரசாங்கம் வழங்கும் நிவாரணம் ஒரு சதமேனும்கிடைக்கவில்லை நானும் ஒவ்வொரு நாளும் கிராமசேவையாளர் கந்தோருக்குப் போய் வருகிறேன். கேட்டால் உங்களுக்குக் கட்டாயம் கிடைக்கவேண்டும் கிடைக்கும் நம்பரைப் பாருங்கள் என்ற பதிலே கிடைக்கிறது. நான் இந்த விவகாரம் பற்றி விபரமாக அரசாங்க அதிபருக்கு ஒரு கடிதம்போட்டேன் இற்றைவரைக்கும் ஒரு பதிலும் வரவில்லை!

ஆதலால் தயவு செய்து இதனுடன் சம்பந்தப் பட்டவர்கள் ஆவன செய்து உண்மையாகப்பாதிக்கப் பட்டவர்களையும் சந்தோஷமடைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

இ. பொன்னம்பலவாணர்
நல்லூர்வடக்கு.

---

[illegible] கவுன்சிலில் அமைச்சர் அமைச்சர் லலித் அத்துலத் முதலி வழக்கும் தாக்கல் செய்தார்.

இவ் வழக்கிற்குச் செலவிடுவதற்கு வாசகர்களிடமிருந்து ஐம்பது சதம் வசூலித்தார், அதன் ஆசிரியர் காமினி.

இதன் பின்னர் வெளிநாட்டுநிருபர்களுக்கு இங்கு வருவதற்கு கடுமையான தடை விதிக்கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இங்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்திய அமைதிப் படையின் ஆட்சிக் காலத்திலும் சர்வதேச செஞ்சிலுவைப் சங்கப் பிரதிநிதிகளுக்கு கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் கடுமையான தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடைகளையும் சுழித்துக்கொண்டு வந்த பத்திரிகையாளர்களுமுள்ளனர்.

சில தினங்களுக்கு முன் ஜேர்மன் பத்திரிகையாளர் வோல்ட்டர் கெல்லர் யாழ். வந்திருந்தார். இதற்குமுன் பத்துத் தடவைகள் யாழ்ப்பாணம் வந்துசென்ற கெல்லர் இம் முறை ஐ. பி. கே. எவ். போட்டுவைத்திருந்த அரண்களும் முகாம்களும் வீதிகளையே சரியாகஅடையாளம் காண முடியாமல் செய்துவிட்டது என்றார். சென்ற தடவை திருகோணமலைக்குச் சென்றுவிட்டு ஹொரவப்பொத்தானை வீதி வழியாக யாழ்ப்பாணம்நோக்கி வந்தபொழுது ஆனையிறவில் வைத்து ஐ. பி. கே எவ். திருப்பியனுப்பிவிட்டது என்றார்.

நேற்று வெளி நாட்டுச் செய்தி ஏஜென்சிகளில் ஒன்றான அசோசியேட்டட் பிரஸிலிருந்து திரு. பற்றிக் குரூசும், லேக்ஹவுஸ் ஒப்சேவர் பத்திரிகையிலிருந்து 'நம்நாள்' அனந்து பாலகிட்ணரும் வந்திருந்தனர்.

எந்தக்கெடுபிடிகளும்இல்லாமல் சுதந்திரமாக உலா வந்தனர்.

---

## பாப்பரசரின்பிரதிநிதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள பாப்பரசரின் பிரதியான அதி. வண. பிரான்கொயிஸ் பாக்குயேஇம் மாதம் இருபத்தாறாம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். அன்றைதினம் யாழ், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதப்பேராலயத்தில் நடைபெறும் கூட்டுத்திருப்பலியிலும், வரவேற்பிலும் அவர் கலந்து கொள்வார்.

ஈழநாதம்

# சிங்களம் மட்டும் சட்டம்போலே பௌத்த மசோதா வரவேண்டாம்

—அத்தவுட

## கூச்சல் குழப்பத்துடன் விவாதம் இன்றுவரை சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்து சிங்களத்துக்கு மாத்திரம் முதலிடம் கொடுத்ததால் ஏற்பட்டவிளைவுகளை நினைவில் கொள்ள வேண்டுமென்றும் பௌத்தத்துக்கு தலைமையிடம் கொடுக்கும் பௌத்த சாஸனம் மசோதா பற்றி மீள்பரிசீலனை செய்யவேண்டுமென்றும் திரு. அத்தாவுட. செனிவிரத்தினா நேற்றுப் பாராளுமன்றத்தில் பௌத்த சாஸன மசோதாமீது பேசுகையில் தெரிவித்தார்.

பௌத்தம்தான் இந்நாட்டில் பெரும்பான்மையான மக்களால் வழிபடும் சமயமாக இருந்தாலும், சகல சமயங்களுக்கும் உரிய இடமளிக்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

இந்த விவகாரத்தில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் அபூபக்கர் பேசுகையில் சிங்கள பௌத்த நிதியம் ஆரம்பிப்பதுபோல் முஸ்லிம்களுக்கும் பைத்துல்மா நிதியம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றார்.

திரு. க. நவரத்தினம் மற்றும் உறுப்பினர்களும் இவ் விவாதத்தில் கலந்துகொண்டு பேசினர். விவாதத்துக்குப் பதிலளித்து அமைச்சர் லொக்கு பண்டார பேசுகையில், எதிர்க்கட்சியினருக்கும் அமைச்சருக்குமிடையில் கடும் வாக்குவாதமும் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது, இந்நிலையில் பிரதிசபாநாயகர் காமினி பொன்சேகா விவாதத்தை இன்று காலைவரை ஒத்திவைத்தார்.

---

### எழுவைதீவு பாடசாலைகளில்

## தளபாடங்களின்மையால் தரையில் மாணவர் படிப்பு

(தீவுப்பகுதி)

எழுவைதீவு மக்களைக் சந்திப்பதற்காகவும், அப்பகுதியில் மக்கள் முன்னணி அமைப்பு வேலைகள் சம்பந்தமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் எழுவைதீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

எழுவைதீவு சனசமூக நிலைய மண்டபத்தில் கருத்தரங்கொன்றும் நடைபெற்றது. இங்குள்ள பாடசாலைகளில் போதிய ஆசிரியரின்மை, கட்டிடத் தளபாட வசதிகள் இன்றி மாணவர்கள் தரையிலிருந்து பாடங்களைப் படிக்கின்றனர்.

மலசலகூட வசதியின்மை, சேவையில் ஈடுபடும் இரண்டு தனியார் இயந்திரப்படகு சேவையுடன் மேலுமொரு படகு சேவை ஆரம்பித்தல் வேண்டும். வைத்திய வசதிகள். போதாது. இங்குள்ள வைத்தியசாலைக்கு வெளியிடத்திலிருந்து புதன்கிழமைகளில் மட்டும் டாக்டர் வந்து போகிறார். வாரத்தில் இரு தினங்களாவது அவரது சேவையைப் பெற்றுத்தரல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே அனலைதீவு மக்களைச் சந்திப்பதற்காகவும் திரு. ஜேம்ஸ் அங்கு சென்றிருந்தார். அங்கும் மக்கள் இதே போன்ற குறைபாடுகள் இருப்பதாகவும் எடுதது்க் கூறியதுடன், நாரந்தனை கண்ணகை அம்மன் கோயிலடியில் இருக்கும் பால வேலைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லையெனவும், இப்பாலம் பூர்த்தியடைந்தால் அனலைதீவு, எழுவைதீவு ஆகியவற்றிற்கு புறப்படுவதற்கான படகில் ஏறுவது சுலபமாக இருக்குமெனவும், இப்பால வேலை நீண்டகாலமாக முடிக்கப்படாத நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டது. (15)

---

### சர்வதேச

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயரும் போக்கு அதிகரிக்கும் இந்நாடுகள் சர்வதேச விவகாரங்களில் சிறிது காலத்துக்கு அதிக ஈடுபாடு கொள்ளாதெனக் கருத இடமுண்டு.

இத்தகைய சர்வதேச அரசியல் பின்னணியில் பாலஸ்தீனரின் கிளர்ச்சிஇரண்டுவருடங்களாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் ஏறக்குறைய 700க்கு மேற்பட்ட பாலஸ்தீனர்களும் 50 இஸ்ரேலியரும் உயிரிழந்துள்ளனர். 10,000க்கு மேற்பட்ட பாலஸ்தீனர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இந்த அசாதாரண கிளர்ச்சியின் மூலம் இஸ்ரேல் இராணுவம் மனத்தளர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் பாலஸ்தீனர் கட்

---

### புத்தக அறிமுக விழா

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை நுண்கலை மன்றத்தின் ஆதரவில் காரை சுந்தரம் பிள்ளையின் ''ஈழத்து இசை நாடக வரலாறு'' நுல் அறிமுக விழா இன்று புதன் கிழமை பிற்பகல். 2.00 மணிக்கு மேற்படி கலா சாலையின் இரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர். வை. கா. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

---

## நிவாரணக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையில் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் இரண்டாம் கட்ட நிவாரணப் பணம் ரூபா 1000/- வழங்கப்படும். 17ஆம் திகதி சனிக்கிழமை அரியாலை மத்தி J/48, கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும். 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு J/52, கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் அத்துடன் கீழ்வரும் கிராம சேவையாளர்கள் பிரிவைச் சேர்ந்த, 2ஆம் கட்ட நிவாரணம் பெறத் தவறியவர்களுக்கு வழங்கப்படும். அவை வருமாறு:-

அரியாலை கிழக்கு (J/46), வண்ணார்பண்ணை வடகிழக்கு (J/50) கந்கர்மடம் (J/51) திருநெல்வேலி கிழக்கு (J/55) கொக்குவில் கிழக்கு (J/58), கொக்குவில் மத்தி. (J/60) என்பன.

---

## 788 இல. கீரிமலை பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டது

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை செல்லும் 788.ம் இலக்க பஸ் சேவை கடந்த ஒரு மாதமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதேபோல 787 இலக்க மாதகல் பஸ் சேவையும நிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது பஸ்கள் பழுது திருத்தவேண்டும் போதிய பஸ் இல்லை என்றே பதில் கூறப்படுகிறது.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து வேறு இடங்களுக்கு பஸ்கள் இல்லாத நேரம் நிலையப் பொறுப்பாளர் பிறிதொரு பஸ்ஸை ஏற்பாடு செய்து சேவையிலீடுபடுத்துகிறார்.

அதேபோல இந்த சேவைகளுக்கு காலையிலும் மாலையிலும் அதாவது வேலைக்கு வரவும் போகவும் பஸ்களை ஒழுங்குபடுத்தவேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றார்கள்.

788ம் இலக்க பஸ் சேவை பற்றி நமது நிருபர் இ. போ. ச. உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அதனைப் பற்றி கோண்டாவில் டிப்போவில் கேட்குமாறு சொல்கிறார்.

இ. போ. ச அதிகாரிகளுக்கே பஸ்களின் சேவைகள் குறித்து விபரங்கள் தெரிவதில்லையெனவுப் பெதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (17)

---

### துக்கதினம்

(கோண்டாவில்)

அடுத்த மாதம் முற்பகுதியில் போக்குவரத்துச் சபை தேசிய துக்கதினம் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் இ. போ. ச. கோண்டாவில் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுநாள்வரை இராணுவ நடவடிக்கைகளினாலும், வேறு விபத்துக்களினாலும் மரணமடைந்த ஊழியர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே இத் தேசியத்தினம் கொண்டாடபடவுள்ளது.

இத் தினத்தையொட்டி மாவட்ட ரீதியாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன், யாழ். மாவட்டத்திலுள்ள ஏழு டிப்போக்களிலிருந்தும் சிறந்த சாரதி, நடத்துனர், இயந்திர வியலாளர் என்று மூவரை தெரிவு செய்து பரிசு வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (34)

---

## சங்கானை வடக்கு, கிழக்கு பகுதி நிவாரணப்பணம் கிடைக்குமா?

(பண்டத்தரிப்பு)

சங்கானை வடக்கு கிராம சேவகர் பிரிவு மக்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் ஈழநாதத்துக்கு தெரிவித்தனர்.

பிராயன்பற்று, வடலியடைப்பு பகுதி மக்களுக்கே இது கிடைக்கவில்லை. இவர்களில் ஒரு சிலருக்கு ஆயிரம் ரூபா முதற்கட்டமாக மானிப்பாய் இலங்கை வங்கி கிளை மூலம் வழங்கப்பட்டது. மிகுதி ஆயிரம் ரூபா கிடைக்குமா எனவும் இவர்கள் கேட்கின்றனர்.

இதேபோல சங்கானை கிழக்கு பகுதி மக்களும் தமக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலமை வழமைக்குத் திரும்பியிருப்பதால் இதனை உடனடியாக அமுல் செய்யலாம் எனவும் இந்த மக்கள் கேட்கின்றனர்.

இதற்காக கிராம சேவகர்களிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும் அலைந்து திரிகின்றனர். (12)

---

### பாகிஸ்தானுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி. சிங் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

பாகிஸ்தானுடன் உறவுகளை மேம்படுத்தவே இந்தியா விரும்புகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்சனையில் பாகிஸ்தான் தலையிடுவதே அங்குள்ள நிலைமைக்கு முழுக் காரணம் எனவும் அவர் எச்சரித்தார்.

---

## ஓவிய சிற்பக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவு எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரியில் கலைஞர் மார்க்குவின் ஓவிய, சிற்ப காட்சியினை ஓவியம், சிற்பம் பற்றிய அறிவை விரிவுபடுத்தும் நோக்கோடு நடாதத் திட்டமிட்டுள்ளது. இக்காட்சியின் சிறப்பம்சமாக 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கலைஞர் மார்க்குவின் கலை ஆக்கங்கள் பற்றிய கலந்துரையாடலை ஓவியர் ரமணி இணைப்பாளராக இருந்து நடாத்தி வைப்பார். இவ்விழாவில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

---

## இருபதாயிரம் பஸ்வண்டிகள் இவ்வாண்டில் ஓடும்

(கொழும்பு)

இவ்வாண்டு இறுதிக்குள் இருபதாயிரம் பஸ்கள சேவையிலீடுபடுத்தப் படவுள்ளதாக போக்கு வரத்து அமைச்சர் விஜயபால மென்டிஸ் தெரிவித்தார்.

இவைதனியார் பஸ்சேவைக்கும், போக்கு வரத்து பஸ் சேவைக்கும் ஈடுபடுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

டுபடுத்தப்படவுள்ளன எனவும் அவர் மேலும் சொன்னார்.

டயர்கள் இல்லாத பஸ்களுக்கு டயர் கூட்டுத்தாபனத்திடமிருந்து டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

### சீனக்குடா..... 1ம் பக்கத் தொடர்ச்சி

விடுதலைப்புலிகள் உவர்மலை

வடக்கு கிழக்கு மாகாண

## சர்வதேச

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயரும் போக்கு அதிகரிக்கும் இந்நாடுகளின் சர்வதேச விவகாரங்களில் சிறிது காலத்துக்கு அதிக ஈடுபாடு கொள்ளாதெனக் கருத இடமுண்டு.

இத்தகைய சர்வதேச அரசியல் பின்னணியில் பாலஸ்தீனரின் கிளர்ச்சி இரண்டுவருடங்களாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் ஏறக்குறைய 700க்கு மேற்பட்ட பாலஸ்தீனர்களும் 50 இஸ்ரேலியரும் உயிரிழந்துள்ளனர். 10,000க்கு மேற்பட்ட பாலஸ்தீனர் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். இந்த அசாதாரண கிளர்ச்சியின் மூலம் இஸ்ரேல் இராணுவம் மனத்தளர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந் நிலையில் பாலஸ்தீனர் கட்டுப்பாடாகத் தொடர்ந்து போராடினால் இவர்களது நீண்டகால போராட்டத்திற்கு சாதகமான ஒரு முடிவு கிட்டுமென்பதில் ஐயமில்லை. அமெரிக்காவின் முயற்சியினால் ஐந்தம்ச சமாதானத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டு, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையில் எகிப்தின் உதவியுடன் சமரசப் பேச்சுக்கள் இடம்பெறலாமென செய்திகள் வெளிவந்துள்ளன. பாலஸ்தீன மக்களும், சர்வதேச சமூகமும் ஐக்கியப்பட்டுச் செயல்படுமிடத்து சுதந்திர பாலஸ்தீனத்தை உண்மையில் காணும் காலம் வெகுதூரத்தில் இல்லையெனக் கருத இடமுண்டு.

மேலும் இஸ்ரேல் மிகவாதிகள் தாராள போக்கினர். பலஸ்தீனரின் பிரச்சினையில் ஈடுபாடு காட்டியும், இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது. சமாதானத்துக்காக நிலத்தைப் பரிமாற்றம் செய்ய முன்வரும் பிரிவினர் அதிகரித்து வருவதுடன் காஸா மேற்குக் கரையில் இஸ்ரேல் யூதக் குடியிருப்புக்களை ஏற்படுத்தக் கூடாது என்ற நிலைப்பாடும் அதிகரித்துள்ளது. மேலும் பாலஸ்தீன உருவாக்கத்திற்கு சாதகமான பிரிவினரும் இஸ்ரேலில் அதிகரித்து வருவதினால் இஸ்ரேலின் இன்றைய கடினபோக்கு நாளடைவில் தளர்ச்சியுறும் என எதிர்பார்க்க இடமுண்டு. பாலஸ்தீனம் ஏற்படுமிடத்து இவ்வரசு பல வழிகளில் ஏனைய அரபுநாடுகளுடன் பார்க்க இஸ்ரேலுடனேயே நெருங்கி செயற்பட வேண்டிய புவியியல், பொருளியல் பண்புகளைப் பெற்றுள்ளது.

ரணப் பணம் ரூபா 1000/- வழங்கப்படும். 17ஆம் திகதி சனிக்கிழமை அரியாலை மத்தி J/48, கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும். 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு J/52, கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் அத்துடன் கீழ்வரும் கிராம சேவையாளர்கள் பிரிவைச் சேர்ந்த, 2ஆம் கட்ட நிவாரணம் பெறத் தவறியவர்களுக்கு வழங்கப்படும். அவை வருமாறு:-

அரியாலை கிழக்கு (J/46), வண்ணார்பண்ணை வடகிழக்கு (J/50) கந்தர்மடம் (J/51) திருநெல்வேலி கிழக்கு (J/55) கொக்குவில் கிழக்கு (J/58), கொக்குவில் மத்தி. (J/60) என்பன.

கான ஏற்பாடுகள் இ. போ. ச. கோண்டாவில் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுநாள்வரை இராணுவ நடவடிக்கைகளினாலும், வேறு விபத்துக்களினாலும் மரணமடைந்த ஊழியர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே இத் தேசியத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

இத் தினத்தையொட்டி மாவட்ட ரீதியாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன், யாழ். மாவட்டத்திலுள்ள ஏழு டிப்போக்களிலிருந்தும் சிறந்த சாரதி, நடத்துனர், இயந்திர வியலாளர் என்று மூவரை தெரிவு செய்து பரிசு வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (34)

கிறார்.

அதேபோல இந்த சேவைகளுக்கு காலையிலும் மாலையிலும் அதாவது வேலைக்கு வரவும் போகவும் பஸ்களை ஒழுங்குபடுத்தவேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றார்கள்.

788ம் இலக்க பஸ் சேவை பற்றி நமது நிருபர் இ. போ. ச. உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அதனைப் பற்றி கோண்டாவில் டிப்போவில் கேட்குமாறு சொல்கிறார்.

இ. போ. ச அதிகாரிகளுக்கே பஸ்களின் சேவைகள் குறித்து விபரங்கள் தெரிவதில்லையெனவுப் பெதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (17)

நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலமை வழமைக்குத் திரும்பியிருப்பதால்

பாகிஸ்தான் தலையிடுவதே அங்குள்ள நிலைமைக்கு முழுக் காரணம் எனவும் அவர் எச்சரித்தார்.

ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரியில் கலைஞர் மார்க்குவின் ஓவிய, சிற்ப காட்சியினை ஓவியம், சிற்பம் பற்றிய அறிவை விரிவுபடுத்தும் நோக்கோடு நடாதத் திட்டமிட்டுள்ளது. இக்காட்சியின் சிறப்பம்சமாக 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கலைஞர் மார்க்குவின் கலை ஆக்கங்கள் பற்றிய கலந்துரையாடலை ஓவியர் ரமணி இணைப்பாளராக இருந்து நடாத்தி வைப்பார். இவ்விழாவில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

# இருபதாயிரம் பஸ்வண்டிகள் இவ்வாண்டில் ஓடும்

(கொழும்பு)

இவ்வாண்டு இறுதிக்குள் இருபதாயிரம் பஸ்கள சேவையிலீடுபடுத்தப் படவுள்ளதாக போக்கு வரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்தார்.

இவைதனியார் பஸ்சேவைக்கும், போக்கு வரத்து பஸ் சேவைக்கும் ஈடுபடுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதுபழுதடைந்து டிப்போக்களில் உள்ள பஸ்களை திருத்துவதறகு உதிரிப்பாகங்களும் மூன்று வாரங்களில் கிடைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

உதிரிப்பாகங்கள் கிடைத்ததும் திருத்த வேலைகள் துரிதகதியில் நடைபெற்று பழுதடைந்த பஸ்களும் சேவையிலீடுபடுத்தப்படவுள்ளன எனவும் அவர் மேலும் சொன்னார்.

டயர்கள் இல்லாத பஸ்களுக்கு டயர் கூட்டுத்தாபனத்திடமிருந்து டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனக்குடா..... 1ம் பக்கத் தொடர்ச்சி

விடுதலைப்புலிகள் உவர்மலை திருமலை நகரம், முற்றவெளி துறைமுகப்பகுதி ஆகிய இடங்களுக்குச்சென்று நிலைகொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாண சபைக் கட்டிடத்துக்கும் சென்று அதைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகளும் பொது மக்களும் கட்டிடத்தின்மீது புலிக்கொடியை ஏற்றினர்.

# போக்கு வரத்து ஒழுங்கு சம்பந்தமாகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை வரும் பதினெட்டாம் திகதி போக்கு வரத்தை ஒழுங்கு செய்தல் சம்பந்தமாக ஒரு கூட்டம் நடாத்தவுள்ளது இக்கூட்டத்திற்கு உள்ளூராட்சி ஆணையாளர், பாடசாலைஅதிபர்கள் இலங்கை போக்கு வரத்து சபை அதிகாரிகள், மினிபஸ் சங்க நிர்வாகஸ்தர்கள். வீதியோர வியாபாரிகள் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கு பற்ற உள்ளனர்.

இக் கூட்டத்தில் தற்போதய அமைதி நிலையை பயன்படுத்தி வீதி ஒழுங்குகளை மாநகர ஊழியர்கள் ஏனையோரின் உதவியுடன் செய்வது சம்பந்தமாக கலந்தாலோசிக்க உள்ளதாக மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடபகுதி.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாலும், தற்போது இவை பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாலுமே இவ்வாறு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளையில் உலக வங்கியின் உதவியுடன் ரயில் சேவையை சீராக்கவும், உலக நாடுகளுடன் சமமாகவும் நடாத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

## யாழ். வைத்தியசாலை

# மக்களிடம் இருந்து உதவி எதிர்பார்க்கின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள பல சிறு சிறு குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பெற்று அபிவிருத்தியை பின் தள்ளவேண்டிய நிலைக்குநாம் உள்ளாகின்றோம்.

இதனை தவிர்த்து கொள்வதற்கு இந்த நாட்டில் உள்ள பணம் படைத்தவர்களிடம் இருந்து உதவியை எதிர்பார்க்கிறோம். அவர்களின் உதவிப் பணத்தில் நாம் சிறு குறைகளை நிவர்த்தி செய்யும்போது, அரசால் எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எமது அபிவிருத்தியை கவனிப்பது வைத்தியசாலை நிர்வாகத்திற்கு சுலபமாக இருக்கும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாக அதிகாரி தெரிவித்தார். (லோ)

பெருமாள் . . .

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுப பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

வடக்குக்கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதா அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுப்பது பற்றிய சட்டப்பிரச்சனைகளை அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதென்றும் இது சம்பந்தமாக விரைவில் ஒரு முடிவெடுக்கப்படுமென்றும் அமைச்சர் ரஞ்சன்விஜேரத்தினா மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி கேட்டிருக்கிறதென்றும் இது பற்றிஜனாதிபதி ஆலோசனை நடத்தி வருகிறாரென்றும் இதில் எந்தவித ஒழிவுமறைவும் இல்லையென்றும் அமைச் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

# வடக்கிலிருந்து நாளை முற்றாக வெளியேறும்

வடபகுதியில் கடந்த இரண்டரை வருடங்களாக நிலைகொண்டிருந்த அமைதிப்படை என்ற இந்திய இராணுவம் படிப்படியாக வெளியேறி இப்பொழுது காங்கேசன்துறையில் மட்டுமே நிலைகொண்டிருக்கிறது. நாளை பதினைந்தாம் தேதி இங்கிருந்தும் இந்தியப்படை முற்றாக வெளியேறிவிடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

மானிப்பாய்----.-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இக் கணக்கை ஆரம்பித்து இருபத்தைந்து ரூபாவுக்கும் குறையாக தொகையை வைப்பிலிட்டு வரலாம். எனவும் அவர் கூறினார்.

பிள்ளையின் பிற[illegible]னத் தன்று ஒவ்வொரு [illegible] வட்டிக் கணக்கி[illegible] ஆயிரத்தி ஐநூறு ரூ[illegible] குறைவான தொகைக்[illegible] விரண்டு வீதமும் ஆயி[illegible] மேற்பட்ட தொகைக்கு பதின மூன்று வீதம் வட்டி வழங்கப்படுகிறது.

பிள்ளைகளின் பிறந்த நாளை நினைவு கூர வங்கியினால் பிறந்த நாள் வாழ்த்து மடலும் அனுப்பப்பட்டு வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (19)

மீளக் குடியமர்வு [illegible]வாரணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

[illegible] மணியம்தோட்டம், உதயபுரம், கிழக்கு அரியாலை, நாவலடி, பூம்புகார் போன்ற இடங்களை உள்ளடக்கிய கிராம சேவையாளர் பிரிவில் வசிப்பவர்களில் பலருக்கு மீளக்குடியமர்தல் நிவாரணப் பணம் ரூபா 1000 இதுவரை கிடைக்க வில்லை என்று புகார் தெரிவிற்கப்படுகிறது.

மேற்படி பகுதியைச் சேர்ந்த கிராம சேவையாளரின் அக்கறையின்மையினாலேயே இப் பணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (கி)

புத்தலத்தில்.......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையர்கள் தமிழில் பேசினார்கள் என்றும் அவர்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் துப்பாக்கிகள் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட மினிபஸ்காரர்கள் அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் இது பற்றி புகார் தெரிவித்துள்ளனர்,

அண்மைக்காலமாக மினிபஸ்களில் பிரயாணம் செய்யும் வடபகுதி பயணிகளிடம், சிங்களப் பகுதிகளில் வைத்து துப்பாக்கி ஏந்திய கோஷ்டியினர் 'தமிழ் மொழியில்' பேசிடமும், பொருட்களை அபகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது. (கி)

தியபோசனம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாரமாக மதிய உணவு கொடுக்கப்படாமை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

நிறுவை.:...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நிறுத்தல் அளவைகள் மோசடிகள் மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நடைபெறுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளார்கள். (31)

ஒரிஸாவிற்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரோறாக்பூர் என்னும் இடத்தில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இவ் முகாம் அமைந்துள்ள இடம் மிகவும் பின்தங்கியதாகும்.

அங்கு இன்றும் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பழங்குடிகள் வாழ்கின்றன. பழங்குடிகள் தங்கள் பிகார் நிலங்களில் வெளியார் வந்து குடியிருப்பதை தீவிரமாக எதிர்த்து வருகின்றார்கள். இவர்களின் இலக்குகள் தற்பொழுது இம்முகாம்களின் மீது திரும்பியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆகையினால் இங்கிருந்து செல்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் இருந்து விசேடபொலிஸ் படை ஒரிஸா சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

கல்முனை..--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயறபோது சென்ரியிலிருந்த பொலிஸார் இரண்டு துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். இதனையடுத்து விடுதலைப்புலிகள் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். நடந்த சம்பவங்களையடுத்து அதிகாரிகள் வருத்தம் தெரிவித்தனர். பின்பு ஒரு சமரசத்தீர்வு காணப்பட்டது. பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸார் வெளியேறக்கூடாதென்று கேட்டுக் கொண்டனர். வீதி திறக்கப்பட்டது புலிக்கொடி பறந்த வாகனம் முன்னே செல்ல இ. போ. ச, தனியார் வாகனங்கள் பின்னால் சென்று தமது வழமையான போக்குவரத்தை தொடர்ந்தனர்.

யாழ் மாவட்டம்...-.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணம் நானூற்றி முப்பத்தைந்து பிரிவுகளாக வரையறை செய்யப்பட்டு மேற்படி வரையறுக்கப்பட்ட பிரிவுகள் எதிர்வரும் பதினைந்தாம் திகதி முதல நடைமுறைக்கு வர உள்ளது. இதற்குரிய உத்தரவை அரசஅதிபர் அன்ரன் அல்பிரட் சகல மாவட்ட ஆணையாளர்களுக்கும் அதாவது பின்னை உதவி அரச அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.